# தொழிலாளி

இலங்கை தொழிலாளர் வர்க்கத்தின் வார இதழ்

மலர் 6 | இதழ் 38 | 20 ஆகஸ்ட் 1967 | பக்கங்கள் 12 | விலை சதம் 15


## சுன்னுகச் சம்பவ வழக்கு

### மேல் விசாரணை செப்டம்பர் 14-ல்

சட்ட விரோதமாக சுன்னுகத்திலிருந்து ஊர்வலம் நடத்த முயற்சித்தனர் என்ற குற்றச் சாட்டின் பேரில் தோழர்கள் கே. ஏ. சுப்பிரமணியம், வீ. ஏ. கந்தசாமி, கே. சூடாமணி ஆகியோர் மீது பொலிஸார் தொடுத்த வழக்கு சென்ற 14-ம் திகதியன்று மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் சுப்பிரிண்டென்டென்ட் ஜீ. டப்ளியூ. லியனகே சாட்சியமளித்தார். மேல் விசாரணை செப்டம்பர் 14-ந் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டது.

எமது தோழர்களின் சார்பில் பிரபல வழக்கறிஞர் திரு என். சத்தியேந்திரா அவர்கள் ஆஜரானர்.

# சாதி பலாத்காரத்திற்கு ஒருவரின் உயிர் பலி!

**யாழ்ப்பாணம் சாதிக் கலவரத்தில் ஒருவர் உயிர்ப் பலியாகி யுள்ளார். கடந்த புதன் கிழமை சங்கானையில் தாழ்த்தப்பட்ட பகுதிகளுக்கு நான் சென்றிருந்தேன். சாதி வெறிபிடித்த உயர் சாதி இந்து ஒருவரின் துப்பாக்கிக்கு இரையான ஐம்பது வயதுள்ள கார்த்திகேசு என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரின் மனைவியை, சோகந்தழுவிய அக் கைம் பெண்ணை, நான் சந்தித்தேன்.**

சங்கானையில் உயர்சாதி எனப்படுவோர் தாழ்த்தப்பட்டோர் எனப்படுவோருக்கு இழைத்துள்ள சேதங்களையும் நான் பார்வையிட்டேன். ஆறு வீடுகளுக்குமேல் பூரணமாகத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. ஒரு வீட்டில் பத்தாயிரம் ரூபாய்க்கும் மேலாகப் பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது. ''உயர்சாதி''யினரின் சமுகத்தைச் சேர்ந்த எமது தோழர் முத்தையாவின் வீட்டை நான் போய்ப் பார்த்தேன். சாதி வெறிபிடித்த இந்துக்கள் அவருடைய வீட்டையும் கல்லால் எறிந்து சேதப்படுத்தியுள்ளனர்.

விளக்கமறியலிலுள்ள தோழர் முத்தையாவையும் நான் சென்று பார்த்தேன். பொலிசாரது நீதிக்கு விரோதமான செயலின் காரணமாக இவர் சிறைப்படுத்தப்பட்டுள்ளார். ஆனால், அவரது வீட்டிற்குச் சேதம் விளைவித்த நாசகாரர் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கின்றனர். பொலிசார் தன்னைக் கைது செய்ததும் தன்னை

**N. சண்முகதாசன்**

அவர்கள் எப்படித் தாக்கினர் என்பதை முத்தையா என்னிடம் கூறினர். இரு பொலிஸ்காரர்கள் தனது கையை அமுக்கிப் பிடிக்க சங்கானை பொலிஸ் நிலையத்தின ''வீரர்''—காம வெறிபிடித்த கழிசடை-சார்ஜண்ட் தாமோதரம்பிள்ளை தன்னை மிருகத்தனமாகத் தாக்கினரென்றும், தான் உதைக்கப்பட்டு விழுத்தப்பட்டு நிமிர்ந்து கிடக்கும் போது, மிருக வெறிபிடித்த அந்த சார்ஜண்ட் தனது வயிற்றில் ஏறி மிதித்ததையும் எடுத்துக் கூறினர். இப்பேர்ப்பட்ட கழிசடைத்தனத்திற்கு எமது பொலிஸ் பெயர் போனது.

சாதிவெறியின் காரணமாக பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் கண்காணிக்கப்படாமல் திரிகையில், எமது தோழர்கள் எட்டு? ஒன்பது பேர் அடைபட்டுக் கிடக்கின்றனர். அண்மையில் நடந்த சம்பவம் யாதெனில், எமது சென்ற வாரப் பத்திரிகையில் வெளியான தலைப்புக் கட்டு

## பொலிஸ் ஒற்றர்களாக திரிபுவாதிகள்

ரையை எமது கட்சி மறு பிரசுரம் செய்து வெளியிட்ட பிரதிகளை கொழும்பிலிருந்து எடுத்துச் சென்றபோது தோழர் எஸ். சிவதாசன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.


இதற்கிடையில், எமதுகட்சி பலாத்காரத்தைத் தூண்டி விடுகிறதென்றும், யாழ்ப்பாணத்தில் ஒரு நக்ஸல்பாரியை உருவாக்க முயல்கிறதென்றும் யாழ்ப்பாணத்தில் ஒரு புரளி கிளப்பிவிடப்பட்டுள்ளது. அங்குள்ள சகல அரசியல் கட்சிகளும்—தமிழரசு, தமிழ் காங்கிரஸ் முதல் சமசமாஜ கட்சி, கெனமன் திரிபுவாதக் கும்பல் வரை—எமக்கெதிராக கேவலமான முறையில் ஒன்று சேர்ந்துள்ளன. இவர்களின் நவீன திரிபுவாதிகளின் நடவடிக்கைகள்தான் மிகவும் மோசமாக உள்ளன. அதிலும் திரிபுவாதிகள் பொலிசுக்குத் தகவல் கொடுக்கும் கேவல நிலைக்குச் சீரழிந்துள்ளனர். சிறுபான்மை தமிழர் ஐக்கிய முன்னணி எனப்படும் ஸ்தாபனத்தின் பேரால் (இதில் இவர்கள் தமிழரசுக் கட்சியின் சில பகுதிகளுடன் கூட்டுத் தலைமைவகிக்கின்றனர்.) அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர். அவ் அறிக்கைகளில் சாதிப் பாகுபாட்டுக்கெதிராக நடைபெறும் இயக்கங்களில் தமக்குத் தொடர்பில்லை எனத் தெரிவித்துள்ளனர். அத்தோடு, எமது தோழர்களின் பெயர்களையும் பொலிசாருக்குத் தெரிவித்துள்ளனர். நவீன திரிபுவாதிகளின் அருகிலிருக்கத்தக்க இறுதிக் கட்டம் இதுவேதான்.

எமது கட்சி பலாத்காரத்தைத் தூண்டி விடுகிறது என்ற குற்றச்சாட்டுக்கு நாம் கூறும் பதில் யாதெனில், ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு என்ற உபதேசத்தைப் பண்ணவில்லை என்ற ''குற்றத்தை'' நாம் ஏற்றுக்கொள்கின்றோம் என்பதுதான்.

இன்று யாழ்ப்பாணத்தில் நிலவி வரும் சாதி அடக்கு முறையை எதிர்த்து, முற்போக்கு எண்ணம் கொண்ட சகல பகுதியினரும் ஒன்றுபட்டு சமூகக் குறைபாட்டுத் தடைச் சட்டம் யாழ்ப்பாணத்தில் அமுல் நடத்தச் செய்யவேண்டிய காலம் வந்து விட்டது. பிரதமரும், பொலிஸ் அதிபரும், மல்வத்தை மகாநாயக்க தேரோவும் இந்தச் சட்டம் அமுல் நடத்தப்படவேண்டும் எனக் கூறியுள்ளனர். இதனைச் செயல்படுத்துவது யார்?

தற்சமயம் சமூக சமத்துவத்திற்கான இயக்கத்தை உறுதியுடன் ஆதரிப்பவர்கள் எமது கட்சியினர் மட்டுமே.

## தைவானிலிருந்து ஒரு அம்மணி



இந்த அம்மணியார் இங்கு நடைபெறும் சாரணச் சிறுமியர்களின் மாநாட்டில் கலந்து கொள்ள வந்துள்ளார். இவருக்கு எப்படி விஸா கிடைத்தது? நாம் தைவானை அங்கீகரிக்கின்ரேமா? இரு 'சீனுக்கள்' சதியை இலங்கை அரசாங்கம் வளர்த்து விடுகிறதா? ஈழத்தின் ஒரே உண்மையான நண்பனுகை நிரூபிக்கப்பட்டுள்ள சீன மக்கள் குடியரசுக்கு எதிரான கோப மூட்டல் அல்லவா இது? (உள் பக்கத்தில் சீன-விரோதச் சின மூட்டல்களைப் பற்றிய கட்டுரையை வாசிக்குக.)

## தோழர்கள் கைது!

ஹர்த்தால் ஞாபகார்த்தத் தினத்தை முன்னிட்டு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகம் செய்ததற்காக எமது தோழர்கள் இருவரைக் கல்கிஸ்ஸ பொலிஸார் சென்ற 12-ம் திகதி கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டத் தோழர்களான டெனிஸன் ஏக்கநாயக்கவும், குணசேனவும் பின்னர் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

## தலையங்கம்

### சார்ஜண்ட் தாமோதரம்பிள்ளையை

# வெளியேற்று!

சங்கானை பொலிசைச் சேர்ந்த சார்ஜண்ட் தாமோதரம் பிள்ளையின் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை ஏற்கனவே பல தடவைகள் நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.

சில மாதங்ளுக்கு முன் எமது இலங்கை வாலிபர் சங்க சம்மேளனத்தின் வட—பிரதேசக்கிளை இந்த சார்ஜண்டின் இழிவான நடத்தைகள் பற்றி பொலிஸ் அதிபருக்குத் தெரியப்படுத்தியது.

அந்தச் சந்தர்ப்பத்தில், இந்த சார்ஜண்டின் கிராமமான பொன்னுலையில் சாதிக் கலவரம் ஏற்பட்ட போது, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மூன்று வாலிபர்களை கைது செய்து, அவர்களின் உடைகளைக் களைந்து, ஒருவருடைய மர்மக் குறியை மற்றொருவர் பிடித்து ஆபாசமான செயல்களைச் செய்யும்படி பலாத்காரப் படுத்தியதற்குப் இவர் பொறுப்பாக இருந்தார்.

இன்று எமக்குக் கிடைத்துள்ள செய்திகளின்படி சங்கானை பொலிசைச் சேர்ந்த இதே சார்ஜண்ட் தேநீர் கடை பிரவேச இயக்கத்தின் போது தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பயங்கரமான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

குறிப்பாக, முன்னல் சங்கானை பட்டின சபை தலைவரான தோழர் முத்தையாவை அநியாயமாக கைது செய்வதற்கும், காவலில் வைக்கப்பட்டிருக்கும் போது முரட்டுத்தனமாகத் தாக்குவதற்கும் இந்த சார்ஜண்டே காரணமாக இருந்தார் என நம்பத்தகுந்த வட்டாரத்தின் தகவலின்படி தெரிகிறது. இரண்டு பொலிஸ்காரர்கள் தோழர் முத்தையாவின் கைகளை அமுக்கிப் பிடிக்க, சார்ஜண்ட் தாமோதரம் அவருடைய வயிற்றில் சப்பாத்துக் காலால் மிதித்தாரென்றும் தெரிகிறது.

இவை யாவும் காம வெறிபிடித்த கழிசடையின் செயல்களாகும். மக்கள் இந்த சார்ஜண்ட் எவ்வளவு தூரம் வெறுக்கின்றனர் என்பதற்கு, இப்போழ்வழி பொலிஸ் நிலையத்திற்கு வெளியே ஆயுதபாணிகளான மெய்க்காப்பாளர்கள் இல்லாமல் உலவ முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது ஒன்றே போதிய சான்ருகும்.

சார்ஜண்ட் தாமோதரம்பிள்ளையை பொலிஸ் படையிலிருந்து வெளியேற்றுமாறு நாம் பொலிஸ் அதிபரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கின்ருேம்.

---

# பகிஷ்காரங்கள் தடை செய்ய படுமா?

எமது நாட்டின் புரட்சிகரத் தொழிலாளர் வர்க்கத்தை நசுக்கியொடுக்கும் தனது திட்டங்களை பிற்போக்கு யு. என். பி. அரசாங்கத்தில் தொழில் அமைச்சர் பதவி வகிக்கும் கேடு கெட்ட மார்க்சிஸ-விரோத ''அறப்போராளி'' எம். எச். முஹம்மது புதுப்பித்துள்ளார்.

ஸ்தாபனங்கள், கப்பல்கள், விமானப் போக்குவரத்துப் பொருட்கள், இத்தியாதியானவற்றையும் பகிஷ்கரிப்பது, ஒடுக்குமுறைக்கெதிராகவும், சட்டபூர்வமான உரிமைகளை நசுக்குவதற்கு எதிராகவும் தொழிலாளர்களின் போராட்டத்தில் பாவிக்கப்படும் முக்கியமான ஆயுதமாகும்.

ஒழுங்கு செய்யப்பட்ட பகிஷ்காரங்கள், தொழிற் சங்கப் போராட்டங்களின் ''இரண்டாவது முனை'' என்று சர்வ தேசிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும்.

தேசிய சோஷலிஸப் போராட்டங்களை அடக்கியொடுக்கும் பொருட்டு ஏகாதிபத்திய நாடுகளிலிருந்து ஆசிய, ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் ஆயுதங்களையும், வெடி குண்டுகளையும் கொண்ட கப்பல்களை, கொழும்புத் துறை முகம் உட்பட, மற்றும் பல துறை முகங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் பல சந்தர்ப்பங்களில் பகிஷ்கரித்துள்ளனர்.

ஏகாதிபத்திய சக்திகளுக்கெதிராக பல்வேறு நாடுகளில் தமது தோழர்கள் நடத்தும் போராட்டங்களுக்கு ஈழத்துப் பாட்டாளி வர்க்கத்தின் ஒத்துழைப்பைத் தெரிவிப்பதற்கு பாவிக்கப்படும் ஆயுதமாகும் அது; சில வேலை நிறுத்தங்களை முறியடிக்க முதலாளித்துவ, ஏகபோகக்கும்பல் செய்யும் எத்தனங்களை மண் கவ்வச் செய்யவும் இந்த ஆயுதம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது.

தமது கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக வேண்டி, ஒரு தனியார் நிறுவனத்தின் பொருட்களைப் பகிஷ்கரித்த போது, இந்த முறை அண்மையில் கொழும்பு துறை முகத்தில் பலமலகப் பிரயோகிக்கப்பட்டது.

பகிஷ்காரங்களை நடத்துவதற்கு தொழிலாளர்களுக் குள்ள உரிமையை அப்படியே இல்லாமலாக்குவதற்கு தொழில் அமைச்சர் முஹம்மது உறுதி பூண்டுள்ளார் என்று நாம் எமது வழமையான நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து அறியப் பெறுகின்ருேம்.

பகிஷ்காரங்களை சட்டத்தின் மூலம் அவர் தடை செய்ய விரும்புகின்ருர்.

---

### சாதி ஒழிப்பு இயக்கத்திற்கெதிராக

# பிற்போக்குவாதிகள் ஒன்று திரண்டுள்ளனர்

**சங்கானையில் சமீபத்தில் நடந்த பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமுற்றவர்களில் ஒருவர் 15-ம் திகதியன்று யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் மரணமடைந்தார்.**

**இதற்குச் சில மணி நேரத்திற்குள்ளாக பொலிஸார் தோழர் எஸ். சிவதாசனை, கிளர்ச்சியைத் தூண்டிவிடக் கூடிய துண்டுப் பிரசுரங்களடங்கிய பார்சல்களை வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டிக் கைது செய்தனர்.**

இதற்கு முன்பாக பொலிஸார் தாம் கைது செய்திருந்த முன்னுள் சங்கானைப் பட்டின சபைத் தலைவர் தோழர் என். முத்தையாவையும் மற்றும் தோழர்களையும் பிணையில் விடுவதை எதிர்த்து வாதிட்டனர். உண்மையில் இன்று யாழ்ப்பாணத்திலே சாதிவேற்றுமை ஒழிப்பை எதிர்ப்பவர்களின் அணிகளுக்குத் தலைமை தாங்குபவர்கள் பிராமணக் குருக்கள் மார்களோ, சாதித் திமிர் பிடித்த கோவில் முகாமைக்காரர்களோ அல்ல. பொலிஸார் தான் இந்த பங்கை வகிக்கின்றனர். பொலிஸார் வல்வெட்டித்துறைச் சம்பவத்தின் பின்னர், தாம் இட்டது தான் சட்டம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றனர்.

முதலாளித்துவப் பத்திரிகைகளின் இப் பிரச்சாரம், தேநீர்க் கடையில் ஒரு கிளாஸ் தேநீர் கேட்பதும், கோயிலுக்குக் கும்பிடப் போவதும், துப்பாக்கியினதும் தோட்டாவினதும் துணை கொண்டு தான் செய்ய வேண்டிய காரியங்கள் என்று கூறுவது போலிருக்கின்றது.

### பத்திரிகைகளின் வெறித்தனம்

இது மட்டுமல்ல; இந்தப் பத்திரிகைகளைப் பொறுத்த வரையில், இந்தத் தேநீர் குடிப்பும்,ஆலயப் பிரவேசமும் பீகிங்கின் தூண்டுதல் பெற்றும், மா ஓ விடமிருந்து உத்வேகம் பெற்றும் தான் நடைநடைபெறக் கூடிய அவ்வளவு பெரும் புரட்சிகர வேலைகள்! குறிப்பாக, கூடுதலாக விஷம் கக்கியது, தமிழரசுக் கட்சியின் 'சுதந்திரன்'. இப் பத்திரிகை ஒரு மா ஓ புரட்சியும், இலங்கையில் ஒரு நக்ஸல்பாரியும் தோன்றும் அபாயம் பற்றி அனைவரையும் எச்சரித்து, முன் பக்கத்தில் தலைப்புச் செய்தியும், போதாதற்கு ஒரு தலையங்கமும் தீட்டியது. நிலப்பிரபுத்துவத்தின் அழுகல் வாடை வீசுகின்ற எதையும் ஆதரிக்க 'சுதந்திர'னுக்குச் சளைக்காத ஆர்வங் கொண்டது ''டெய்லி மிரர்'' பத்திரிகை. இது பொலிஸாரின் கருத்தை அடிப்படையாகக் கொண்ட பின்னணி விளக்கங்களையும் மா ஓ வின் இலச்சினைகளை (பாட்ஜுகள்) அணிந்த செங்காவலர்கள் ''தறி கெட்டுத் திரிவது'' பற்றி வரவரக் கூடுதலான வெறிக் கூச்சல் கலந்த தினசரித் தலையங்கங்களையும் தன் வாசகர்களுக்கு அளித்தது.

### அரசியல் கட்சிகளின் போக்கு

பிற்போக்கின் இந்த அணிவகுப்பைப் பூர்த்தி செய்ய அரசியல் கட்சிகளும் இதில் இடம் பிடித்துக் கொண்டுள்ளன.

திரு. சிவசிதம்பரம் எம். பி. தன் தேர்தல் மேடைகளில் சமூக சமத்துவம் பற்றிச் சண்டப்பிரசண்டம் செய்தாரென்ற போதிலும், இப் பிரச்சினை பற்றி தமிழ் காங்கிரஸ் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. சாதி வேற்றுமையை வெளிப்படையாக எதிர்ப்பதற்கு நேர் மாருக, தமிழ் காங்கிரஸ், இந்தப் பிரச்சினையை அடுத்த தேர்தலில் வைதீக இந்துக்களின் வாக்குகளைப் பெற்று, பிற கட்சிகளைத் தோற்கடிக்க உபயோகிக்க முடியும் என்று நம்புகிறது.

தமிழரசுக் கட்சி எடுக்கும் நிலை, எதிர்ப்பே தவிர வேறல்ல. அதற்கு சமூக சமத்துவம் வேண்டுமாம். ஆனல், அது சமாதானமாகவும், நீதி மன்றத் தீர்ப்புகள் மூலமாகவும், மனமாற்றத்தின் மூலமாகவும்தான் வரவேண்டுமாம்! இப்படியாக அது, தாழ்த்தப்பட்ட சமூகத்தினரையும் சாதிக்கார இந்துக்களையும் ஒரே நேரத்தில் மகிழ்விக்க முனைகிறது. இருந்தாலும் சமத்துவத்திற்கான இயக்கத்திற்கு ஆதரவு தரும் கம்யூனிஸ்ட் கட்சியைத் தாக்குவதில் தமிழரசு எம். பி-க்கள் துடியாசவுள்ளனர். தமிழரசுக் கட்சியின் மிகப் பெரிய வாய் வண்டவாள எம். பி. திரு. அமிர்தலிங்கத்தின் தொகுதியில் (சங்கானையும் இத் தொகுதியில் தான் அடங்கியுள்ளது.) நடந்த கூட்டமொன்றில், இது மிகத் தெளிவாக வெளிப்பட்டது. கூட்டமேடையில் கம்யூனிஸ்ட் பேச்சாளர்கள் இருப்பதைக் கண்டதும் திரு. அமிர்தலிங்கத்திற்குக் கோபம் தாங்கவில்லை. சமீபத்திய சம்பவங்களின் காரணமாக யாழ்ப்பாணத்தின் பெயர் தென் பகுதியில் கெட்டுவிட்டதென்றும், உரிமைகள் குறைந்த மக்களை நடத்துவதில் யாழ்ப்பாணம் ஏன் இவ்வளவு காட்டுமிராண்டித்தனமாகஇருக்கிறது என்று தென்பகுதி எம். பி-க்கள் தன்னைக் கேட்கிருர்களென்றும், தன்னல் அவர்கள் முகத்தில் விழிக்க முடியவில்லையென்றும் பச்சையாகவே கூறிவிட்டார் அமிர்தலிங்கம்; அடுத்து சமசமாஜக் கட்சியும் ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றி எவ்வளவோ பேசிய போதிலும், தமிழ் காங்கிரஸின் மௌனத்துக்குச் சளைக்காத ஆழ்ந்த மௌனத்தைச் சாதுரியமாக அனுஷ்டிக்கிறது.

### பொலிசாருக்கு உளவு கூறும் திரிபுவாதிகள்

ஆனல், இவர்களின் கூட்டாளிகளான கெனமன் திரிபுவாதிகள் இந்த வழியைக் கடைபிடிக்க இயலாது. காரணம், யாழ்ப்பாணத்தில் இவர்களுக்குள்ளே ஒரேயொரு ''ஜனரஞ்சக''ப் பேர் வழி சிறுபான்மைத் தமிழர்களின் ''தலைவ''ரான திரு. எம். சி. சுப்பிரமணியம் என்பதுதான். இவரும், தமிழரசுக் கட்சியின் முன்னுள் செனட்டர் திரு. ஜி. நல்லையாவும்தான் (இந்தத் திரிபுவாதிகள் தெற்கிலே தமிழரசைத் தாக்கிக் கொண்டு, வடக்கிலே அவர்களோடு கூட்டுச் சேரும் புதுமையையும் இங்கு கவனிக்க வேண்டும்.) சிறுபான்மைத் தமிழர்களின் ''பிரதிநிதிகள்.'' இவர்களின் மிகப் பெரும் சாதனை அரசாங்க அதிபரோடும் பொலிஸாரோடும் மாநாடுகள் கூடியதும்,

---

**எமது யாழ்ப்பாண நிருபர்**

---

இந்தப் பலாத்காரத்திற்கெல்லாம் காரணமென்று கம்யூனிஸ்ட் கட்சியைக் குற்றஞ் சாட்டி, அதனேடு தமக்குத் தொடர்பு எதுவுமில்லை என்று காட்ட பெரும் முயற்சி செய்து, பிரதம மந்திரிக்கு மகஜர் அனுப்பியதுமாகும்.

சிறுபான்மைத் தமிழர்களின் ''தலைவர்க''ளிடமிருந்து சாதிக்காரப் பிற்போக்காளர்களுக்கும் பொலிஸுக்கும் இதைவிடச் சிறந்த நற்சாட்சிப் பத்திரம் கிடைக்க முடியுமா? யாழ்ப்பாணத்தின் மார்ட்டின் லூதர் கிங்கும், ரோய் வில்கின்ஸுமான திருவாளர்கள் நல்லையாவையும், சுப்பிரமணியத்தையும் விட, சமூக சமத்துவத்திற்கான இயக்கத்திற்கும் அதன் ஆதரவாளர்களுக்கெதிராக உளவு சொல்வதற்கு பொலிஸாருக்கு வேறு திறமான ஒற்றர்களும் கிடைக்க முடியுமா?

### இப்படிச் செய்யலாமே?

இவர்கள் சொல்வது போல, தாழ்த்தப்பட்ட மக்கள் கம்யூனிஸ்டுகளால் தவருன வழியில் இட்டுச் செல்லப்படுகிருர்கள் என்ருல், திருவாளர்கள் நல்லையாவும், சுப்பிரமணியமும் தங்கள் ஆதரவாளர்களை, இலங்கை ''காந்தி'' திரு. செல்வநாயகத்தின் பின்னல் அணிதிரட்டி, திரு. பொன்னம்பலத்தைச் சட்ட ஆலோசகராகவும், திரு. டட்லி சேனநாயக்கவைப் போஷகராகவும் கொண்டு, தாங்கள் சாத்தியம் என்று கூறுகின்ற சமாதானமான, சுமுகமான முறையில் கோயில்களையும், தேனீர்க் கடைகளையும் திறந்துவிடலாமே? ஏன் செய்யாமலிருக்கின்றனர்?

இவர்களின் சாத்வீக இயக்கம் வெற்றியீட்டியதும், தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் மத்தியிலுள்ள தீவிர புரட்சிகரப் பிரிவினர் ஒதுங்கி நின்று, மகிழ்ச்சியோடு இவர்களுக்கு கைதட்டி மாலை போடுவர்.

ஒரு வேளை, பொலிஸார் அப்போதும் துப்பாக்கி வெடிகள் தீர்க்கக்கூடும். ஆனல், மரியாதை செய்வதற்கு மட்டும்தான் வெடி தீர்ப்பார்கள்!

## சீன - விரோத பல்லவி மீண்டும் பாடப்படுகிறது

# சீனமூட்டலின் பின்னணி என்ன?

**கடந்த சில மாதங்களாக இங்கு நடைபெற்று வரும் சீன விரோத இயக்கத்தைப் பார்க்கும் பொழுது, இத்தகைய தீய சம்பவங்களுக்குப் பின்னால் ஒரு விதமான திட்டமிடப்பட்ட நடைமுறை காணப்படுகிறது.**

முதன் முதலில், இலங்கைக்கான தூதுவரை சீனா நியமித்த போது, அவரை ஏற்றுக்கொள்ள மறுத்தமையாகும். சீனாவுக்கெதிராக இச் சின்னஞ் சிறு இலங்கையால் செய்யப்பட்டத் தலையீட்டின் காரணமாக, எமக்குக் கூடுதலான பொருளாதார உதவியை அளிக்கும் சீனம், எமக்குத் தேவையான அரிசியின் கூடுதலான பகுதியையும் அளிக்கின்ற அந்த நாடு, ஒரு தற்காலிக ஸ்தானிகரால் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

இரண்டாவதாக, இலங்கைக்கு வரும் சகல சீன புத்தகங்களையும் சஞ்சிகைகளையும் பறிமுதல் செய்யும் பாரதூரமான நடவடிக்கையில் சுங்கப் பகுதியினர் இறங்கியுள்ளனர். பீகிங் றிவியூ போன்ற சீனச் சஞ்சிகைகளுக்குச் சந்தா செலுத்தியவர்களுக்குக் கூட அவை கிடைப்பதில்லை. அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மன், இந்தியா போன்ற நாடுகளிலிருந்து, மக்களின் ஒழுக்கத்தைச் சீரழிக்கக் கூடிய நிர்வாண, அரை நிர்வாணப் படங்கள் நிறைந்த கேடுகெட்ட சஞ்சிகைகள் எவ்வளவு தொகையும் இங்கு இறக்குமதி செய்யப்படலாம்!

இத்தகைய பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் நம் நாட்டிற்குத் தாராளமான முறையில் வரவழைக்கப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. சோவியத் யூனியனிலிருந்து பெருந்தொகையான திரிபுவாதக் குப்பைகள் இலங்கைக்கு இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளது. மக்கள் சீனத்திலிருந்து எத்தகைய சஞ்சிகைகளும் புத்தகங்களும் இறக்குமதி செய்யப்பட முடியாது.

### சீனத்திற்கு அளிக்கும் கௌரவம்

ஒரு விதத்தில் அது சீனத்திற்கு அளிக்கப்படும் பெரும் கௌரவமாகும். இன்றைய கால கட்டத்தில் சீனா உலகிற்கு தெரிவிக்க வேண்டிய செய்தி புரட்சிகரமானதென்ற உண்மையை ஒப்புக்கொள்வதாகும்! எனினும் சீன அரிசியை உண்ண அனுமதிக்கப்பட்ட நாம், சீனச் சஞ்சிகைகளை வாசிக்கக்கூடாது என்பது சிரிப்புக்கிடமானதாகும்.

எனினும் கடைசியாகச் செய்த அவமதிப்பு பொறுக்க முடியாததாகும். மாபெரும் சீனத் தலைவர் தோழர் மா சே-துங்கின் உருவந் தாங்கிய பாட்ஜுகளை சுங்கப்பகுதியினர் தடை செய்துள்ளனர். இந்த பாட்ஜுகள் இலங்கையிலுள்ள சீனத் தூதராலயத்திற்கு அனுப்பப்பட்டவையாகும். தோழர் மா சே-துங் சீன மக்களின் மாபெரும் தலைவரென்பதையும், சீன மக்கள் தமது தலைவருக்கெதிரான எத்தகைய சீன மூட்டல்களையும் சகித்துக் கொள்ளும் நிலையில் இல்லையென்பதையும் எமது பிற்போக்கு அரசாங்க அதிகாரிகள் அறிந்து கொள்ள வேண்டும்.

சீன மூட்டும் செயல்கள் இவை மட்டுமல்ல. ஏகபோக முதலாளித்துவத் தினசரிகள் சீனத்திற்கெதிரான திட்டமிட்ட அவதூறுப் பிரச்சாரத்திலும் இறங்கியுள்ளன. லேக் ஹவுஸ் பத்திரிகைகளும், குறிப்பாக சிலோன் டெய்லி நியூஸ், டைம்ஸ் ஒப் சிலோன் கும்பல் பத்திரிகைகளும், சீன விரோதப் பிரச்சாரத்தில் ஒன்றையொன்று முந்திக்கொள்ளப் போட்டியிடுகின்றன.

### தூதராலயத்திற்கு முழு உரிமையுமுண்டு

தமது தூதராலயத்தின் எல்லைக்குள் சுலோகங்களைக் கொண்ட பதாகைகளைத் தொங்கவிட்டு, தமது சிந்தனையைப் பிரச்சாரப்படுத்த சீனத் தூதராலயம் முனைந்தபோது, இப் பத்திரிகைகள் அதற்கெதிராக வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதற்கு மக்களைத் தூண்டிவிடப் பிரயத்தனம் செய்கின்றன. வெளிநாடுகளில் தூதராலயங்கள் நிறுவப்படுவதன் நோக்கம், தத்தமது நாட்டை வெளி நாடுகளில் விளம்பரப்படுத்துவதற்காகத்தான் என்பதை பிற்போக்காளர்களின் கைக்கூலிகளான இவர்கள் அறிவார்கள். சகல தூதராலயங்களும் இதைத்தான் செய்கின்றன. எந்த முறையில் இதைச் செய்ய அவர்கள் விரும்புகின்றனரோ, அந்த முறைகளைத் தெரிந்தெடுப்பது அவர்களைப் பொறுத்த விஷயமாகும். இவ்விவகாரத்தில் தலையிடுவதற்கு முதலாளித்துவப் பத்திரிகைகளுக்கு என்ன உரிமை இருக்கிறது?

பர்மாவில் நடந்த விஷயங்களுடன் இவற்றையும் ஒப்பிடுவதற்கு இப்பத்திரிகைகள் முயற்சிக்கின்றன. இவர்கள் ஏன் நயவஞ்சகமாகப் பொய் சொல்கின்றனர்? இலங்கையில் சீன நகரங்கள் இல்லையென்பது யாவரும் அறிந்ததே. எப்படியிருப்பினும், பர்மாவில் நடந்த கலவரங்களைத் தூண்டிவிட்டவர்கள் சீனர்கள் அல்ல, பர்மாவிலுள்ள பிற்போக்காளர்களே. இதற்கும் பர்மாவில் நடந்த சம்பவங்களுக்கும் எங்கே ஒற்றுமை இருக்கிறது? சமூக நிதிக்காக இலங்கையில் நடைபெறும் எத்தகைய கிளர்ச்சிகளிலும் ஒரு அந்நிய நாட்டின் தலையீட்டையே இப் பத்திரிகைகள் காண்கின்றன. (அந்த அந்நிய நாடாகக் குறிப்பிடப்படுவது சீனாவேயாகும்.) தற்போது வட இலங்கையில் சாதி அடக்குமுறைக்கெதிராக இயக்கம் நடத்தப்படுகிறது. இந்தப் பிற்போக்குப் பத்திரிகைகளில் பணிபுரியும் இக் கனவான்களை நாம் நம்ப வேண்டுமென்றால், இப் பிரச்சினைகளுக்கெல்லாம் பொறுப்பானவர்கள் சீனர்களே! சாதித் திமிர் பிடித்து பிற்போக்கு ஹிந்துக்களும், அடக்குமுறையில் ஈடுபட்டுள்ள பொலிஸும் அல்ல.

### இரு 'சீனா' சதிக்கு ஒத்துழைப்பு

சீன விரோத நடவடிக்கைகளில் ஈடுபடவும், இரண்டு 'சீனாக்கள்' என்ற சதிக்கு ஆதரவு தேடவும், தைவானிலுள்ள துரோகத்தனமான கைப்பாவை ஆட்சியின் பிரதிநிதிகளை பல்வேறு சாட்டுக்களில் இலங்கையில் நுழைய இடமளிக்கவும் செய்ததன் மூலம் இலங்கை சீன மக்கள் குடியரசின் கோபத்தைக் கிளறியுள்ளது. இலங்கை சீன மக்கள் குடியரசை மட்டுமே அங்கீகரித்துள்ளது. எமது அரசாங்கம் தைவானிலிருந்து வரும் தூதுகோஷ்டியினருக்கு எவ்வாறு விசா வழங்க முடியும்? சாரணச் சிறுமியர் இயக்கத்தைச் சேர்ந்தவரென்று சொல்லிக்கொண்டு தைவானிலிருந்து ஒரு பெண்மணி இலங்கை வந்து, இப்போது நம் மத்தியிலிருக்கிறார். (முதல் பக்கத்தில் அவரது போட்டோவைப் பார்க்கவும்) எதிர் வரும் டிசம்பரில் நடக்கவிருக்கும் குத்துச் சண்டைப் போட்டியில் கலந்து கொள்வதற்காகத் தைவானிலிருந்து ஒரு குழுவினர் வருகின்றனர்.

இவ்வியக்கத்தின் பின்னாலுள்ளவர்கள் யார்? இந்நாட்டிலுள்ள அமெரிக்கத் தாசர்களும், சோவியத் திரிபுவாதிகளும், இந்தியப் பிற்போக்காளர்களும்தான் அவர்கள்! இன்னும் ஐந்து வருட காலத்திற்குப் புதுப்பிக்கப்பட வேண்டிய சீன- இலங்கை பொருளாதார ஒப்பந்தத்தைப் புதுப்பிக்காமல் தடுப்பதற்கே இச் சகல சக்திகளும் அக்கறை கொண்டுள்ளன. உயர்மட்ட அரசாங்கத் தூதுக் குழுவொன்று அக்டோபரில் சீனம் செல்லவிருக்கின்றது. அத் தூதுக் குழுவிற்கு வர்த்தக அமைச்சரே தலைமை தாங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதே வேளையில், நிதி அமைச்சரே தலைமை தாங்கிச் செல்ல வேண்டுமென்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. இப் பேச்சுவார்த்தைகள் மிக முக்கியமானவை. இலங்கை எதிர்நோக்கியுள்ள பாரதூரமான பொருளாதார நெருக்கடியில், சர்வதேச சந்தை விலையிலும் பார்க்கக் குறைந்த விலையில் நமக்கு அரிசியை விற்றும், சர்வதேச விலையிலும் பார்க்கக் கூடிய விலையில் எமது ரப்பரை வாங்கியும் சீனா செய்யும் உதவியே ஒரேயொரு பிரகாசமான வெளிச்சமாகும்.

ஆனால் சில தீய சக்திகள் இந்த ஒப்பந்தத்தை நாசப்படுத்த முனைந்துள்ளன. சீனாவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை நாசப்படுத்தும் நோக்குடன் இத் தீய சக்திகள் சீன-விரோதச் சம்பவங்களை உண்டு பண்ணி சீனத்தின் கோபத்தைக் கிளறிவிட முயற்சிக்கின்றன.

### பாறையைத் தூக்குவது தமது கால்களில் போட்டுக் கொள்ளவே!

சகலவிதமான பிற்போக்காளர்களும் தமது சொந்தக் கால்களில் போட்டுக் கொள்வதற்கே பறையைத் தூக்குகின்றனர் என்ற சீனப் பழமொழியை நாம் திரும்பவும் கூற வேண்டியுள்ளது. இந்தச் சீன எதிர்ப்பாளர்கள் யாவரும் ஒரு துக்ககரமான முடிவைத்தான் எதிர்பார்க்கலாம். சீன-இலங்கை ஒப்பந்தத்தையிட்டு இந்நாட்டு மக்கள் பெருமைப்படுவதுடன் அதனைத் தமது கண்ணின் மணிகளெனப் பாதுகாக்கவும் செய்வர்.

**எமது விசேஷ நிருபர்**

# எமது பொருளாதாரத்தைச் சீர்குலைக்க இந்தியா முயற்சி

இந்தியா எமது நாட்டின் பொருளாதாரத்தைச்சீர்குலைக்க முனைந்துள்ளதென்ற நியாயமான சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் பலமான முறையில் நிலவி வருகிறது.

இந்தியா எமக்குப் பருப்பு தருவதற்கான ஒப்பந்தத்தை மதித்து நடக்கத் தவறிய சூட்டோடு இன்னுமொரு அதிர்ச்சிக்குரிய செய்தி வந்துள்ளது. இதுவும் இந்தியாவுடனான ஒப்பந்தம் பற்றியதே! அதாவது, பொது மக்களின் அத்தியாவசிய சேவையான புகையிரத போக்குவரத்துக்கு நிலக்கரி அளிப்பதற்கான ஒப்பந்தத்தைப் பற்றியது.

சென்ற மாதம் 12-ம் திகதியன்று, புகையிரத இலாகாவின் ஜெனரல் மனேஜர், தனது இலாகா அலுவல்கள் சம்பந்தமாக ஆலோசிக்கும் பொருட்டு தனது உயர்தர நிர்வாக உத்தியோகத்தர்களைக் கூட்டியிருந்தார்.

இந்தியாவிலிருந்து வரும் நிலக்கரி கெட்டியற்றதாகவும், சிறு கட்டிகளாகவும் இருப்பதனால் நிலக்கரி பாவனை அதிகரித்துவிட்டதென உத்தியோகத்தர்கள் முறையிட்டரெனக் குறிப்பிடப் பட்டுள்ளது.

நெருக்கடியான கால கட்டங்களில் இலங்கைக்கு இந்தியா வேண்டுமென்றே தாமதித்து உதவியளிப்பது அறிந்த விஷயமே. அதே போன்று ஏகாதிபத்தியவாதிகளின் நடவடிக்கைகளுக்கு இச் சின்னஞ் சிறு இலங்கையைக் களமாக்கும் முயற்சியில் சீன விரோதப் பிரச்சாரத்தின் பெரும் கட்டிகளை எம்மில் திணிப்பதற்கு மிகவும் சுறு சுறுப்பாகச் செயல் படுகின்றதென்பதும் ஊரறிந்த விஷயம்.

தமது செய்கைகளுக்கு ஓர் எல்லையுண்டென்று இந்தியாவுக்குச் சொல்ல புகையிரத இலாகாவின் ஜெனரல் மானேஜருக்கு அதிகாரம் உண்டு.

இந்தியர்களோடு நிலக்கரி ஒப்பந்தம் செய்துக் கொள்ளப்பட்டதன் நிபந்தனைகளைப் பார்போமேயானால் திருப்திகரமற்ற நிலக்கரியை வேண்டாமென்று கூறுவதற்கு தனக்கு முழு அதிகாரமும் உண்டென்பதை அவர் அறிவார்.

நிலக்கரிப் பாவிப்பால் ஏற்படும் அதிகரிப்பைத் தடுப்பதற்கு புகையிரத இலாக்காவின் ஜெனரல் மானேஜர் தவறுவாரேயானால், அவரே இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில் நமது புகையிரத சேவையில் இது மேலும் நஷ்டத்தை ஏற்படுத்தும்.

## நம்மைச் சுற்றி

நவம்

# சங்கானி கக்கிய 'பொன்மொழிகள்'

சில வாரங்களுக்கு முன்னர் இலங்கையிலுள்ள உதவிஸ்தானிகர் மைனர் சங்கானி பற்றித் தொழிலாளி வெளியிட்டிருந்த கட்டுரை சிலருக்கு நினைவிருக்கலாம். இலங்கை மண்ணிலே மக்கள் சீனுவை வம்புச் சண்டைக்கு இழுக்கும் அமெரிக்க தாசனைப் பற்றி இந்திய லோக்சபையில் பேச்செழுந்த போது, இந்திய வெளிநாட்டமைச்சர் சக்ளா சங்கானியை ஆதரித்துப் பேசி, சங்கானியின் நகைச்சுவையைப் பாராட்டியுள்ளார். ரோம் நகரம் தீப்பற்றி எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்த கதைபோல இருக்கிறது சக்ளாவின் குறிப்பு. எனினும் மைனர் சங்கானி அதிக நாள் தொடர்ந்து ராஜதந்திர சேவையில் இருக்கப் போவதில்லை என்று இங்குள்ள ''நண்பர்கள்'' சிலரிடம் அண்மையில் கூறினுராம். இந்தியாவிலே வேகமாக வளர்ந்து வரும் தீவிர வலதுசாரி இயக்கங்களின் மத்தியில், மாஜி மன்னர்கள் முன்னணி ஒன்று அமைத்து வருகின்றனர். இன்றைய இந்திய நாடாளுமன்ற அரசியலில் அபரிமிதமான செல்வாக்குடன் விளங்கும் மாஜி மன்னர்கள் இரத்தத்தில் துரோக உணர்வு ஓடுகிறது. வலதுசாரி காங்கிரஸ் இடதுசாரி என்று ஓலமிடும் இம் மகாராஜாக்கள் முன்னணியில் மந்த குமாரன் சங்கானியும் சேரப்போகிறதாம். இப்பொழுதே, தனது கடமையைச் செய்யாது களியாட்டத்திற் காலங்கழிக்கும் இந்த டம்பாச்சாரி சமீபத்தில் பொன்மொழி ஒன்றை வாந்தியெடுத்தது: ''ஸ்தானிகராலயத்தில் முக்கியமான அலுவல்கள் எனது கவனத்திற்கு வந்தால் அவற்றை ஹைகமிஷனருக்கே விட்டு விடுவேன்; முக்கிய மற்ற அலுவல்கள் என்ருல் எனது கீழதிகாரிகளுக்கு விட்டுவிடுவேன். குஷியாக இருப்பதே எனது நோக்கம்'' இது சங்கானியின் வார்த்தைகள். அதனுல் அவரது நாடும் அரசாங்கமும் எக்கேடும் அடைவது பற்றி எமக்கு அக்கறையில்லை. ஆனுல் தலை வீக்கத்துடன் பொறுப்பில்லாமல் எமது தாயகத்தில் பேசித்திரிய மக்கள் அநுமதியார் என்பதை மன்னர்க் குஞ்சு அறிந்தால் நல்லது.

### சென்ற காலம் மீளாது இனி மூடரே

'தமிழ் உலகம்' என்ற மகுடத்துடன் புதிய பத்திரிகை ஒன்று கொழும்பில் தொடங்கப் பெற்றுள்ளது. தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி ஆகியவற்றுடன் விரக்தியடைந்த சிலர் இத் தாளைத் தொடக்கியுள்ளனராம். அவர்களின் விரக்தி நியாயமானதே; ஆனுல் முடிவு முட்டாள்தனமாகும். ''உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு'' என்றும் ''தலையைக் கொடுத்தும் தமிழைக் காப்போம்'' என்றும் கீச்சிட்ட தள(ர்)பதிகளும், தாத்தாக்களும், தாடிவாலாக்களும் கிடைச்சதைச் சுருட்டிக்கொண்டு 'தேசியம்' பேசும் இன்றைய நிலையில், மீண்டும் மொழிவெறி பேசுவது முட்டாள்தனமன்றி வேறென்ன? மொழியும், மதமும், பிரதேசமும் அல்ல பிரச்சினை. அவை என்றுமுள்ளன. தமிழரசும், காங்கிரசும், யு. என். பி. யும், ஜாதிக பெரமுனையும், மற்றும் தஹநாயக்க, சி. பி. டி சில்வா, பிலிப் குணவர்தன போன்ற உதிரிகளும் வர்க்க அடிப்படையில் ஒற்றுமைப்பட்டுள்ளன. அந்த ஒற்றுமையாளர் மொழி, மத, இன வேற்றுமைகளைக் கடந்த பண மொழி பேசுபவர். சுரண்டும் வர்க்கத்து மனுேபாவமுடையவர். எனவேதான், முற்போக்குச் சக்திகளுக்கு எதிராக ஒன்று கூடியுள்ளனர். துரோகத்தின் அடிப்படை அங்குதான் இருக்கிறது. இதற்குப் பதில் இன, சமத, மொழி வேறுபாடுகளை டந்து, ஒடுக்கப்பட்ட மக்களும், தொழிலாளரும், விவசாயிகளும் முற்போக்கு அணியில் ஒன்றுபடுதலாகும். அதைவிடுத்து, மீட்டும்மீட்டும் மொழித் தூய்மையும், இனத் தூய்மையும் பேசுவது கசந்த திராட்சைப் பழக் கதையையே நினைவூட்டுகிறது. பாரதி பாடியது போல ''சென்ற காலம் மீளாதினி மூடரே!''

★

# ஆத்மாவை அடகு வைத்த பத்திரிகாசிரியர்

### பணம் பத்து விதம் செய்யும்

சில வாரங்களுக்கு முன்னர் திரிபுவாதச் சார்பு ஏடான 'டிரிபியூன்' நடத்திவரும் கம்யூனிஸ விரோத பிரசாரத்தைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். அதைப்போலவே அண்மைக் காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளிவரும் கூட்டுறவு என்ற பத்திரிகை சீன விரோத — கம்யூனிஸ எதிர்ப்பு-இயக்கத்தில் இறங்கியுள்ளது. இளம் கன்று பயமறியாது என்பது பழமொழியல்லவா? அதற்கேற்ப, வேறு வக்கில்லாத சில 'இளசுகள்' எழுதும் இச் சஞ்சிகை (குறிப்பாக ஆங்கில ஏடு) அணுகுண்டுப் பிரச்சினையிலிருந்து, அச்சுவேலிப் பிள்ளையார் கோயில் விவகாரம் வரை யாவற்றிலும் கை வைத்துள்ளது. சீனச் சஞ்சிகைகள் இந்நாட்டிற்குள் வருவதைத் தடைசெய்வது நல்லதே என்று குரல் கொடுக்கும் கூட்டுறவு தன்னை ஒரு நடு நிலைமை ஏடாகக் கருதிக் கொள்கிறது போலும். சாதிப் பிரச்சினை தீவிரவாதக் கம்யூனிஸ்டுகளின் அத்துமீறிய செயலின் விளைவு என்று விளக்கம் கூறும் அப் பத்திரிகை தனக்கும் ஒரு சமூகப்பணி உண்டு என்று துணிந்து கூறிக் கொள்கிறது போலும்.

கூட்டுறவு என்னும் இப் பத்திரிகை வட பகுதி கூட்டுறவு சமாசத்தின் செய்தித் தாளாகத் தொடங்கப்பட்டது. பலரகப்பட்ட மாஜிகளும், சமூக சேவையாளரும் தலைமை தாங்கி வழி நடத்தும் இச்சமாசம் பொதுப் பணத்தில் செழித்து வளர்ந்து, சக்தி வாய்ந்த உள்ளூர் வர்த்தக் நிறுவனமாக மாறியுள்ளது. பணம் என்ன செய்யும்? பத்து விதம் செய்யும். முதலாளித்துவ - வர்த்தக - மனுேபாவம் பெற்றுவிட்ட இச்சுரண்டல் ஸ்தாபனம், இப்பொழுது முதலாளித்துவப் பத்திரிகைகளின் கற்றுக் குட்டியாக ஏதேதோ புலம்புகிறது. அமெரிக்கத் தூதுவராலயத்தின் செய்திப் பகுதியினரின் ஊது குழலாக மாறிவிட்ட இப்பத்திரிகை கூட்டுறவை மறந்து வேறு புதிய உறவுகளை வளர்க்க முனைந்துள்ளது. இங்கும் ஒரு அம்சம் கவனிக்கத் தக்கது! கூட்டுறது ஏடு கம்யூனிஸ்டுகளை இரு வகையாகப் பகுக்கின்றது. நல்ல கம்யூனிஸ்டுகள்; கெட்ட கம்யூனிஸ்டுகள் முன்னவர் திரிபுவாதிகள்; பின்னவர் மார்க்சிஸ - லெனினிஸ்டுகள். இது கூட்டுறவாளரின் கண்டுபிடிப்பு. ஆங்கில இலக்கியம் கற்றதனுலோ என்னவோ, ஆத்மாவையே அடகு வைத்துவிட்ட அப்பத்திரிகை ஆசிரியர் இவ்வாறு எழுதுதிலும் அசல் வெள்ளையனுகவே இருக்கிருர். சேர். அலெக் டக்ளஸ் ஹியூம் என்ற பிரித்தானிய கன்சர்வேட்டிவ் கட்சித் தலைவர் ஒரு சந்தர்ப்பத்திலே கூறினுர், ''ஒட்டி உலர்ந்து உடல் சுருங்கிப் போயுள்ள கம்யூனிஸ்டைவிட, உண்டு கொழுத்து வாட்ட சாட்டமான கம்யூனிஸ்டை நான் விரும்புகிறேன்'' என்று குருஷ்சோவின் ஐரோப்பிய விஜயத்தின் போது கூறப்பட்ட ''பொன் மொழி'' இது. கூட்டுறவு ஆசிரியர் இதனையே பொன்னைப் போல் போற்றி எழுதுகிருர். போலும் இவ்வாறு எழுதுவதைப் பாராட்டி 'எமது அனுதாபி' என்று நெஞ்சைத் தட்டுகிருர்கள் சில திரிபுவாதிகள். ஆங்கிலமே இந் நாட்டு கல்வி மொழியாக இருக்க வேண்டுமென்று கருதும் நேசையா (காந்தீயவாதி?) போன்ரூர் தலைமை தாங்கும் கூட்டுறவு ஆங்கில தாசன் ஒருவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் பொழுது வேறு எதை எதிர்பார்க்க முடியும்? சார்ந்ததன் வண்ணமாகவே இருக்குமாம் தத்துவம்.

★

# மூச்சில் கம்யூனிஸ எதிர்ப்பும் சுங்கானில் தமிழரசுப் புகையும் விட்டுக்கொண்டிருந்த வானொலி அதிகாரி இளைப்பாறுகிருராம்

### வானொலியில் பதவிப் போட்டி

தென் கிழக்காசியப் பிராந்தியத்திலே ஏகாதிபத்தியவாதிகள் பெரும் சிரத்தை கொண்டிருப்பது யாவருமறிந்ததே. ''மலேஷியா'', இந்தோனேஷியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைக் கருவாகக் கொண்டு, ஜப்பான், அவுஸ்திரேலியா ஆகியவற்றின் தார்மீக பலத்துடன் சீனுவிற்கு எதிரான கேடயம் ஒன்றை ஆங்கிலேய - அமெரிக்க ஏகாதிபத்தியம் மும்முரமாக உருவாக்கி வருகிறது. இதில் மெல்ல மெல்ல இலங்கையையும் இழுத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் விரும்புகின்றனராம். விரும்பத் தக்கதே என்று ஏரிக்கரை முதலாளிகளுக்கு, முன்னைநாள் ஒப்சேவர் பத்திராதிபர் தா[illegible]ஸிவித்தாச்சி அண்மையில் ''அறிவுரை'' வழங்கியுள்ளாராம். வேறுபலவழிகளிலும் ''மலேஷியா'' கேந்திர நிலையமாக மாறிவருகிறது. உதாரணமாகச் சமீப காலத்திலே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஒலிபரப்பாளர் சிலருக்கு ''மலேஷிய'' வானொலியில் பயிற்சி பெற உபகாரச் சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தற்செயலான சம்பவம் அல்ல. திட்டமிடப்பட்ட செயல் என்று விஷயமறிந்த சிலர் கூறுகின்றனர். நுட்பமான கம்யூனிஸவிரோத-ஏகாதிபத்தியச் சார்பான-பிரச்சாரத்தில்இவ்வாறு பயிற்சி பெற செல்வோருக்குப் பயிற்சிஅளிக்கப்படுகிறதாம். பலகாலமாகத் தமிழ் ஒலிபரப்பிற் உத்தியோகத்தர்கள் புறக்கணிக்கப்பட்டதாகவும் இப்பொழுது தான் தாங்கள் வெளிநாடுகள் செல்லும் வாய்ப்புக் கிட்டியது என்றும் ஒருவர் சொன்னுர். வெளிநாடுகள் போவதில் ஒன்றுமில்லை. தமது நாட்டுக்குத் துரோகம் செய்யாமலிருந்தால்போதும். இதற்கிடையில் இலங்கை வானொலித் தமிழ்ப் பகுதியில் சிறிய சலசலப்புக் காணப்படுகிறதாம். தமிழரசுப் போர்வையில் சுங்கானைப் பிடித்துக் கொண்டு சொகுசாக இருந்த அதிகாரி இளைப்பாறுவதற்கு முன்னதாக லீவில் இருக்கிருராம். எனவே பதவிப் போட்டி ஆரம்பமாகியுள்ளது. இளைப்பாறவிருக்கும் தமிழரசுவாதி கம்யூனிஸ எதிர்ப்பை தனது மூச்சாகக் கொண்டவர். காமாலைக்கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள் என்பது போல பார்க்குமிடமெங்கும் பயங்கர கம்யூனிஸ்டுகளைக் கண்டு சீறியவர் க. செ. நடராசா. ஜனநாயகம், மக்கள், வளர்ச்சி முதலிய சொற்களை ஒலிபரப்பிலிருந்து தேசப்பிரஷ்டம் செய்தவர் அவர். இதற்கெல்லாம் ஒரு நாளைக்கு அவர் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

### புது மொழிகள்-3

சொல் வேறு செயல் வேறு என்ருல் சோவியத் திரிபுவாதம் என்பது பொருள்.


வாசியுங்கள்

RED FLAG

ஆங்கிலவார ஏடு

விலை சதம் 15

விபரங்களுக்கு:-

121, யூனியன் பிளேஸ்

கொழும்பு-2

# மாக்சிஸ-லெனினிஸ ஆடைக்குள் பதுங்கியிருக்கும் இந்திய திரிபுவாதிகள்

**இரண்டு கொள்கைகளுக்கிடையிலான கூர்மையான போராட்டமொன்று நீண்ட நெடுங்காலமாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுள் நிகழ்ந்து வந்துள்ளது. இந்தியப் புரட்சியினது வெற்றியும் தோல்வியும் தங்கியிருக்கக் கூடியதான, எந்தப் பாதையை எடுக்க வேண்டியது என்ற பிரச்சினை மீதுதான் போராட்டம் நடைபெற்று வந்துள்ளது.**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுள்ளிருக்கும் புரட்சியாளர்கள் ஆயுதப் போராட்டத்தின் மூலமாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு, அதாவது மகோன்னத முதல்வர் தலைவர் மா சே-துங்கின் வழிகாட்டலின் கீழ் புரட்சியில் வெற்றியீட்டிய சீன மக்களின் பாதையை எடுக்க வேண்டுமென்பதற்கு, உறுதியான முறையில் வாதாடி வந்துள்ளனர். சில திரிபுவாதத் தலைவர்கள், கொதிப்படைந்த நிலையில் திரிபுவாதப் பாராளுமன்றப் பாதையை முன் தள்ளி, இந்தியப் புரட்சிக்குப் பெரும் பாதகத்தை விளைவித்துள்ளனர்.

1946-51ம் ஆண்டு காலத்தில், வடக்கு ஆந்திர இராஜ்யத்திலுள்ள ஒரு பிரதேசமான தெலுங்கானாவில் (முன்பு இது ஹைதராபாத்தின் ஒரு பகுதியாக இருந்தது.) பல இந்திய கம்யூனிஸ்டுகளினதும் பரந்த வெகுஜனங்களினதும் முயற்சியினால் ஆயுதப் போராட்டத்திற்கான தளப் பிரதேசங் கொளுத்தி, முன்னென்றுமே இல்லாத அளவில் உயர்த்திப் பிடித்துமுள்ளனர். திரிபுவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுள்ளிருக்கும் புரட்சியாளர்களுக்குக் கிடைத்த முக்கியமான வெற்றியாகும் இது.

தெலுங்கானாவில் ஆயுதப் போராட்டம் மா சே-துங் சிந்தனையின் வெளிச்சத்தில் ஆயுதந் தாங்கிய போராட்டம் முதலாவதாக 1946 ஜூன் மாதத்தில், நால்கொந்தா மாவட்டத்திலுள்ள ஷயாபேட்டில் வெடித்தது. ஆந்திர மஹாசபாவின் ஊழியர் ஒருவரை ஒரு நிலப்பிரபு கொன்றதன் மூலம் போராட்டம் வெடித்தெழுந்தது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமைதாங்கப்பட்ட விவசாயிகள் கிளர்ந்தெழுந்ததோடு, நிலப்பிரபுக்களிடமிருந்து நிலத்தையும் ஆயுதங்களையும் கைப்பற்றினர். புரட்சிப் புயல் அப் பிரதேசத்தின் நாலா திக்குகளிலும் பரவியதுடன், மக்கள் கமிட்டிகளும் மக்கள் தொண்டர்களும் எங்கெங்கும் ஸ்தாபிக்கப்பட்டன. அவர்கள் ஹைதராபாத் ஆட்சியாளன் நிஸாமுடைய 30,000 துருப்புகளுக்கு எதிராகப் போராடினர்.

தடவையாக, தெலுங்கானா வாழ் விவசாயிகள் விடுதலை செய்யப்பட்டனர். நிஸாமின் இராஜதானியம் அதன் அடிப்படையிலிருந்தே குலுக்கப்பட்டது.

முதலில், விவசாயிகளின் எழுச்சியை விழுத்துவதற்காக வேண்டி நேரு ஆட்சி நிஸாமுக்கு ஆயுதங்களையும் யுத்தத் தளவாடங்களையும் வழங்குவதோடு மட்டும் நின்று கொண்டது. பின்னர், நிலப் பிரபுத்துவ இளவரசர்கள் நெருக்கடியான ஆபத்தில் சிக்கியிருப்பதைக் கண்டதும், நேரு பத்தாயிரக்கணக்கானத் துருப்புக்களை ஹைதரபாத்தில் தலையிட உத்தரவிட்டதோடு, தெலுங்கானாவை இரத்தத் தடாகத்தில் முக்கி எடுத்தார். பத்து இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் கைதுசெய்யப்பட்டதுடன், சித்திரவதை செய்யவும் பட்டனர்.

தாக்குதல் நடத்துதல் உட்பட்ட சரியான தந்திரோபாயங்களை கொரில்லாக்கள் கையாண்டனர். 1950 அக்டோபருக்கும் டிசம்பருக்குமிடையில் அவ்வாறான நடவடிக்கைகள் 344 மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதே ஆண்டின் இறுதியில், கரிம் நகர் மாவட்டத்து கொரில்லாக்கள் 300 கிராமங்களின் வெகுஜனங்களோடு தொடர்புகளை நிலைநாட்டினர். 1951-ன் ஆரம்

> ## அமெரிக்க சமூகம் நோயுள்ள சமூகம்
> ### அமெரிக்க செனட்டரே கூறுகிறார்
>
> அமெரிக்க செனட்டர் ஜே. வில்லியம் புல்பிறைட் ஜோன்சனின் நிர்வாகத்தைக் கடுமையாகத் தாக்கிப் பேசுகையில், அமெரிக்கா பலாத்காரத்தின் சின்னமாக மாறிவிட்டதென்று கூறினார்.
>
> மேலும் அவர், ''வியட்நாமில் நாம் நடத்தி வரும் யுத்தம் எமது ஜனநாயக வாழ்க்கையை விஷமூட்டிக் கெடுக்கிறது. அதன் காரணமாக அமெரிக்க சமூகம் நோயுள்ள சமூகமாக மாறி விட்டது'' என்று தெரிவித்தார்

# இந்திய புரட்சிக்கு இழைத்த துரோகத்தின் சரித்திரம்

கள் அமைக்கப்பட்டன. ஆயுதந்தாங்கிய போராட்டத்தின் மூலமாக நிலங்களைக் கைப்பற்றுமாறு நிலமற்ற, சிறிது நிலமுள்ள விவசாயிகளையும் அவர்கள் எழுப்பியுட்டதுடன், அந்த நேரத்தைய இந்திய மக்களின் புரட்சிகரப் போராட்டத்தின் பதாகையாகவும் அவர்கள் விளங்கினர். ஆனால், திரிபுவாதிகளின் துரோகம் காரணமாக இந்த ஆயுதந் தாங்கியப் போராட்டம் துடைத்தழிக்கப்பட்டது. பல ஆண்டுகளாக இத் திரிபுவாதிகள், ''சமாதான மாற்றம்'' மூலமாக இந்தியா சோஷலிஸத்தை அடைய முடியும், சீனாவிலிருந்து இந்தியா வேறுபட்டது, ஆயுதந் தாங்கிய போராட்டம் இந்தியாவுக்கு இலாயக்கற்ற முறை என்றெல்லாம் கூறி தவறான கருத்தை உண்டு பண்ணினர், அவர்களது திரிபுவாதப் பாராளுமன்றப் பாதையை மூடி மறைக்கவும், இந்தியப் புரட்சியை வழி தவறச் செய்யவும் வேண்டியே இவையனைத்தும் செய்யப்பட்டன.

### புரட்சியாளர்க்குக் கிடைத்த வெற்றி

திரிபுவாதிகளுக்கு எதிரான நீண்ட காலப் போராட்டத்திற்குப் பின்னர், அவர்கள் வெற்றிகரமான முறையில் பாதத்தை முன்னெடுத்து வெத்துள்ளதுடன், டார்ஜீலிங் மாவட்டத்திலுள்ள நக்ஸல் பாரி பிரதேசத்தில் ஆயுதந் தாங்கிய போராட்டத்தின் ஒளிவிளக்கை மீண்டும்

வளர்ந்தது. 44,000 சதுர மைல் பிரதேசத்தையும், ஒரு கோடிக்கும் மேற்பட்ட ஜனத்தொகையையும் கொண்டது தான் தெலுங்கானா. அங்குள்ள விவசாயிகள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தினாலும் நிலப்பிரபுத்துவத்தினாலும் நீண்ட நெடுங்காலமாக ஈவிரக்கமற்ற முறையில் சுரண்டப்பட்டு வந்துள்ளனர். அரைவாசி நிலம் இளவரசர்களுக்குச் சொந்தமானதுடன், மற்றவை பெரும் நிலப்பிரபுக்களின் கைகளில் இருந்தன. 50 சத விகிதத்திற்கும் மேலான விவசாயிகள் நிலமற்றவர்களாவர். கொடுங்கோலாட்சியின் கீழ் மக்களது வாழ்க்கை, பாரத்தைத் தாங்கி நிற்கும் விலங்குகளைப் போன்றதாகும்.

தெலுங்கானா வாழ் மக்கள், போராட்டத்தின் உன்னதப் பாரம்பர்யங்களையுடையவர்கள். ஆயிரத்துத் தொள்ளாயிரத்து முப்பதாம் ஆண்டுகளிலும், நாற்பதாம் ஆண்டுகளின் ஆரம்பத்திலும், நிலப்பிரபுக்களின் சுரண்டலுக்கு எதிரான வெகுஜனப் போராட்டங்கள் வெடித்தன. விவசாயிகளின் மத்தியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு நிலைகுலையாது வளர்ந்து கொண்டிருந்தது. 1946-ல், ஆந்திர மஹாசபா என்ற இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் தலைமை தாங்கப்பட்ட வெகுஜன ஸ்தாபனம் 1,00,000-க்கும் மேற்பட்ட அங்கத்துவத்தைக் கொண்டிருந்தது.

1947-ம் ஆண்டு முடிவில் இந்த எழுச்சி 300 கிராமங்களுக்குப் பரவியது. அதற்கடுத்த ஆண்டின் ஆரம்ப மாதங்களில், மா சே-துங் சிந்தனையின் அடிப்படையில் ஆயுதந் தாங்கிய போராட்டம் அலையலையாக மேலும் உயர்ந்து சென்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பிராந்திய ஸ்தாபனங்கள் சீனப் புரட்சியின் பாதையில் விடாப்பிடியாக நின்றன. 1948 செப்டம்பர் அளவில், இந்த

### போராட்டத்தை அடக்குவதில் காங்கிரஸ் கண்ட தோல்வி

பெருந்தொகையான எதிரியுடன் போராடுகையில், இராணுவ ரீதியில் அனுபவமற்ற காரணத்தால் விவசாய கொரில்லாக்கள் தற்காலிகமான பின்வாங்கல்களை வேண்டியதோடு, அவர்களின் தலைவர்களில் சிலர் ஊசலாட்டம் கொண்டனர். எனினும், வெகுஜனங்களின் பரிபூரண ஆதரவோடு அவர்கள் தமது சக்தியை மீண்டும் திரட்டிக் கொண்டதுடன், போராட்டத்தைத் தொடர்ந்தனர். அவர்களில் சிலர் தொடர்ச்சியான போராட்டத்திற்காக வேண்டி காடுகளுக்குச் சென்றனர்; அவர்கள் கைவிட்ட கொஞ்ச நாட்களுள் மற்றவர்

பத்தில், ஆந்திர இராஜ்யத்தின் கரையோரப் பிராந்தியங்களிலுள்ள 100-க்கும் மேற்பட்ட கிராமங்களில் கொரில்லாக்கள் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். 1951-ன் இறுதி வரையிலும் கூட, தெலுங்

# தெலுங்கானாப் போராட்டம்-திரிபுவாதிகளின் திண்டாட்டம்

எழுச்சி, கிட்டத்தட்ட 3,000 கிராமங்களையும் ஏறத்தாழ முப்பது இலட்சம் மக்கள் தொகையையும் சிவப்பு அரசியல் ஆட்சியின் கீழ் உள்ளடக்கியதாக, முழு தெலுங்கானாவெங்கும் பரவிற்று. கொரில்லாப் படை 2,000 மக்களைக் கொண்டதாகவிருந்ததோடு, 10,000 கிராமத்தவர்கள் மிலிஷியாவில் சேர்ந்தனர். விடுதலை செய்யப்பட்ட பிராந்தியங்களில் விவசாயச் சீர்திருத்தம் செய்யப்பட்டது. நிலமற்றவர்களும் கொஞ்சம் நிலமுடையவர்களுமான விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக சுமார் பத்து இலட்சம் ஏக்கர் நிலத்தை நிலப்பிரபுக்களிடமிருந்து பறித்தெடுத்தனர். சரித்திரத்திலே முதல்

கள் நடவடிக்கைகளில் ஈடுபடத் திரும்பினர். ஆந்திராவின் கரையோர மாவட்டங்களில் கொரில்லா நடவடிக்கையின் புதுப் பிராந்தியங்கள் அமைக்கப்பட்டன. 1948-க்கும், 1951-க்குமிடையில், தெலுங்கானா ஆயுதந் தாங்கிய போராட்டத்தின் ஜ்வாலைகளை ஆயுத பலத்தால் அணைப்பதில் காங்கிரஸ் கட்சி வெற்றி காணவேயில்லை.

### கொரில்லா நடவடிக்கைகள்

1949-க்குப் பின்பு, முக்கியமாக 1950-லும் 1951-லும், எதிரித் துருப்புகளைப் பதுங்கியிருந்து தாக்குதல், எதிரியின் வாகனங்களை நொறுக்குதல், ஆயுதக் குவியல்களிலும் பொலிஸ் ஸ்டேஷன்களிலும்

கானாவின் மலைப் பிராந்தியங்களினுள்ளே செல்லுவதற்கு அரசாங்கத் துருப்புகள் அச்சம் கொண்டிருந்தன.

1950 அக்டோபரில், தெலுங்கானாவையும், வட சென்னை பக்கமுள்ள ஆந்திராவையும் உள்ளடக்கிய, 40,000 சதுர மைல்களையும், ஒரு கோடி மக்கள் தொகையையும் கொண்ட மிகப் பெரும் கொரில்லா பிரதேசமொன்று நிறுவப்பட்டது.

### எங்கெங்கும் கொரில்லாப் போராட்டங்கள்

தெலுங்கானாவின் ஆயுதந் தாங்கிய போராட்டத்தின் அருமையான வெற்றிகள், முழு தேசத்தினதும் விவசாயிகளது போராட்டங்களில் அளப்பிடற்கரிய பிணைப்பை

—8-ம் பக்கம் பார்க்க

# அமெரிக்க ஏகாதிபத்தியத்தைக்

**இன ஒடுக்குமுறைக்கு எதிரான ஆபிரிக்க-அமெரிக்கர்களின் சக்திமிக்க போராட்டம் இவ்வாண்டு கோடை காலத்தின் போது அமெரிக்க தேசத்தின் குறுக்கும் நெடுக்குமாக வேகமான முறையில் பரவியுள்ளது. அமெரிக்க ஏகபோக மூலதனத்தின் பிற்போக்கு ஆட்சியின் மீது மூர்க்காவேசம் கொண்டு சவுக்கடி தொடுத்து, புயலின் வேகத்தை சுமார் நூறு நகரங்களில் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.**

**ஜூலை மாதப் பின் பாதியில் நெவார்க்கிலும் டிட்ரோய்ட்டிலும் வெடித்துக் கிளம்பிய மாபெரும் ஆயுதப் போராட்டத்திற்கு ஒப்பிடக்கூடிய சம்பவங்கள் அமெரிக்க சரித்திரத்தில் மிகச் சொற்பமே. அமெரிக்க மக்களின் விடுதலைக்கான போராட்டத்தின் சரித்திரச் சுவடிகளிலே, பாசிஸப் பலாத்காரத்திற்கெதிரான அவர்களது தைரிய மிக்க, திறமைமிக்க போராட்டம் அருமையான புதிய பக்கமொன்றைச் சேர்த்துள்ளது.**

நியூ யோர்க், லோஸ் ஏஞ்செல்ஸ், சிகாகோ வாழ் உறுதி மிக்க ஆபிரிக்க-அமெரிக்கர்களின் உன்னதப் பாரம்பர்யத்தை முன்னெடுத்துச் சென்று, நெவார்க்கிலும் டிட்ரோய்ட்டிலுமுள்ள கறுப்பு மக்கள் இந்த ஆண்டில் கடினமான போராட்டமொன்றை முன் தள்ளியுள்ளனர்: பாறைகளையும் செங்கற்களையும், தாமே தயாரித்த வெடி மருந்துப் போத்தல்களையும், குறிப்பிட்டளவு துப்பாக்கிகளையும் கைகளிலேந்தி, பெருந்தொகையான எதிரிகளுடன் அவர்கள் போரிட்டனர். நெவார்க்கில், கறுப்பு மக்கள், 7,000-ற்கும் அதிகமான பூரண ஆயுதந் தரித்த துருப்பினருக்கும் பொலிஸாருக்கும் எதிராக நான்கு தினங்கள் இரவும் பகலும் போராடினர்; டிட்ரோய்ட்டில், ஹெலிகோப்டர்களாலும் டாங்கிகளாலும் கவச வாகனங்களாலும் ஆயுதபாணியாக்கப்பட்டிருந்த துருப்புகளோடும் பொலிஸாரோடும், ஆபிரிக்க-அமெரிக்க மக்கள் ஆறு தொடர்ச்சியான நாட்கள் போராடினர். கறுப்பு நிற வேட்டைக்காரர்கள், பாறைகளையும், செங்கற்களையும், வெடிமருந்து போத்தல்களையும் தமது ஆயுதங்களாகப் பாவிக்கும் கறுப்பு மக்களின் வெகுஜனங்களோடு சேர்ந்து, பாசிஸத் துருப்புகளுக்கும் பொலிஸாருக்கும் ஏற்றத் தண்டனைகளை வழங்கிய சக்திமிக்க போராட்ட அணியொன்றை ஸ்தாபித்தன. நெவார்க்கிலும், டிட்ரோய்ட்டிலும் துருப்புகளும் பொலிஸாரும் சுமார் 200 திடீர் சம்பவங்களினால் தாக்குதலுக்குள்ளாகினர் என்று முழுமையற்ற புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

கறுப்பு மக்கள் போராடத் துணிவு மட்டும் கொள்ளவில்லை; போராட்டத்தில் அனுபவமும் பெற்றுள்ளனர். சில வேளைகளில் அவர்கள் எதிரியின் தலைமை ஆணை நிலையங்கள் மீது திடீர் தாக்குதல்கள் தொடுத்து, ''தாக்கிவிட்டு ஓடு'' என்ற தந்திரோபாயத்தைக் கையாள்கின்றனர். இதன் விளைவாக, டிட்ரோய்ட் பொலிஸ் தலைமை நிலையத்திலுள்ளவர்கள் சில சமயங்களில், இரவு வேலைகளில் விளக்குகளைக் கொளுத்துவதற்குத் துணிவு கொள்ளாது இருந்திருக்கின்றனர். சில வேலைகளில், தூண்டிவிடும் துருப்புகளையும் பொலிஸையும் சிதறியோடச் செய்தனர். அத்துடன் இந்த அடக்குமுறையை வழிநடத்துகின்ற டிட்ரோய்ட் மேயர் தனது உயிரை இழப்பதற்குமிருந்தார். அங்கு அமைக்கப்பட்டுள்ள எந்த முகாமை எடுத்துக் கொண்டாலும், கறுப்பு மக்கள் ஒரு பக்கத்தை நோக்கிச் சுடுகின்றனர். மற்றொரு பக்கத்தை நோக்கி செங்கற்களை வீசுகின்றனர். இதைக் கண்டதும் துருப்பினரும் பொலிஸாரும் குழப்பத்திற்குள்ளாகின்றனர். இவ்வாறு இந்த ஏவல் நாய்களின் திமிரை அடக்குகின்றனர்.

ஆண்டாண்டு காலமாக ஆளும் வர்க்கத்தினால் தம் மீது பிணைக்கப்பட்டிருந்த ''அஹிம்சை'' என்ற தத்துவத்திலிருந்து தம்மை விடுவிப்பதில் கறுப்பு மக்கள் மேலும் முன்னேறியுள்ளனர் என்பதை நெவார்க், டிட்ரோய்ட்டில் நடைபெற்ற ஆபிரிக்க-அமெரிக்கர்களின் பெரும் போராட்டங்கள் தெளிவாகக் காட்டியுள்ளன. ஆபிரிக்க–அமெரிக்கர்களிடையேயுள்ள அமெரிக்க ஆளும் வட்டாரத்தின் பாதங்களை நக்கிக் கொண்டிருக்கும் சிறு கும்பலின் ''அஹிம்சை'' பற்றிய நீதி போதனைகள், நெவார்க்கிலும், டிட்ரோய்ட்டிலும் அல்லது மற்றும் நகரங்களிலும் அதிகதிகமாக உதைத்துத் தள்ளப்பட்டுவிட்டன. ''சகிப்புத் தன்மை'' பற்றி உபதேசம் புரியும் அவர்களில் சிலர் தற்காப்புக்கான ஆபிரிக்க–அமெரிக்கர்களின் பலாத்காரப் போராட்டத்தின் போது, கிட்டத்தட்ட வெகுஜனங்களால் கொல்லப்பட்டே விட்டனர். ''துப்பாக்கிகளைத் தவிர வேறெதையுமே மதிக்காத'' முறையில் இனவெறி ஆட்சியாளர்கள் நடத்தும் கொள்கையில், ''அஹிம்சாவாத'' முறைகளைக் கையாள்வதன் மூலமும், ''இரக்கம்'' காட்டுமாறு ஆளும் வட்டாரத்திடம் பிச்சை கேட்பதன் மூலமும் எங்குமே எதையும் சாதாரணமாகப் பெற்றுவிட முடியாது என்பதை ஆபிரிக்க–அமெரிக்கர்கள், தமது போராட்டத்தின் போது உணரத் தலைப்பட்டுள்ளனர்.



அதே நேரத்தில் முதலாளித்துவ சட்டரீதியான நடவடிக்கை, அற நீதி என்ற விலங்குகளை ஆபிரிக்க-அமெரிக்கர்கள் உடைத்தெறிந்துள்ளனர். நெவார்க்கிலும், டிட்ரோய்ட்டிலும் மற்றும் நகரங்களிலும் அவர்கள் இன ஒதுக்கலுக்கு எதிராக நடத்திய போராட்டங்களின் போது, முதலாளித்துவவாதிகளால் நடத்தப்படும் பல கடைகளுக்கு தயவு தாட்சண்யம் காட்டாது

# எதிர் புரட்சிப் பலாத்காரத்திற்கெதிராக புரட்சிகரப் பலாத்காரம்

**அ**மெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிறப் பாகுபாட்டுக்கெதிரான ஆபிரிக்க-அமெரிக்கர்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து மகோன்னத முதல்வர் தலைவர் மா சே-துங் விடுத்த அறிக்கையின் நான்காவது ஆண்டு தினம்தான் ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி. நான்கு ஆண்டுகளாக, அமெரிக்காவிலுள்ள ஆபிரிக்க-அமெரிக்கர்களின் விழிப்புணர்ச்சிக்கு பெரும் உத்வேகத்தையும், வாழும் உரிமைக்கும் விடுதலைக்குமான அவர்களது போராட்டத்திற்குப் பெரும் உற்சாகத்தையும் அளித்துள்ள அருமையான தஸ்தாவேஜாக விளங்கி வந்துள்ளது, தலைவர் மா ஒவின் அறிக்கை.

இந்த நான்கு ஆண்டுகளும், ஆபிரிக்க-அமெரிக்கர்களின் பொதுவான விழிப்புணர்வினதும், அவர்களது போராட்டத்தின் வேகமான எழுச்சியினதும் பலமான வளர்ச்சியினதும் ஆண்டுகளாகியுள்ளன. இந்த நான்கு ஆண்டு காலமாக, அமெரிக்க ஆளும் கும்பலினால் வரையறுக்கப்பட்ட ''சட்டமும்'' ''ஒழுங்கும்'' என்ற சகல கட்டுப்பாடுகளையும் அடித்து நொறுக்கிய பின்னர், ஆபிரிக்க-அமெரிக்கர்கள் ஆயுதங்களைக் கையிலேந்தியும், எதிர்ப் புரட்சிப் பலாத்காரத்தைப் புரட்சிகரப் பலாத்காரத்தால் எதிர்ப்பதென்ற பாதையை அச்சமேதுமின்றி தெரிந்தெடுத்தும், ''அஹிம்சை'' என்ற கயிற்றைத் துண்டித்து எறிந்துமுள்ளனர்.

## போராட்டச் சரித்திரத்தில் புதிய அத்தியாயம்

1964 ஜூலையில், உலகிலேயுள்ள ஆகப் பெரிய ''சிறைத் தடுப்பு முகாமான'' ஹார்லெம், ஆபிரிக்க-அமெரிக்கர்களின் போராட்டச் சரித்திரத்தில் புதிய அத்தியாயமொன்றைத் துவக்கி வைத்த, ஆபிரிக்க-அமெரிக்கர்களின் மிகப் பெரியளவிலான பலாத்காரத்தைக் கண்டது. அந்த நேரத்தில், கறுப்பு நிறக் குழந்தையொன்றைக் கொலை செய்ததற்காக அமெரிக்கப் பொலிஸைக் கண்டித்த பல்லாயிரக் கணக்கான கறுப்பு அமெரிக்கர்கள், பொலிஸாரால் தாக்கப்பட்டனர். அவர்கள் பல்லாயிரக்கணக்கான பொலிஸாருக்கு எதிராக செங்கற்களையும், தடிகளையும், பெட்ரோல் போத்தல்களையும் கொண்டு ஆறு பகல்களும் இரவுகளும் போராடினர். ஹார்லெம் போராட்டத்தினால் உந்தப்பட்ட ரோசெஸ்டர், ஜேர்ஸி, பிலாடெல்பியா வாழ் கறுப்பு மக்களும், தற்காப்பிற்காகப் பலாத்காரம் பிரயோகித்து, ஒன்றன்பின் ஒன்றாக எழுந்தனர்.

1965 ஆகஸ்டில், வோட்ஸிலுள்ள 7,000 ஆபிரிக்க-அமெரிக்கர்கள், இன அடக்குமுறைக்கெதிரான ஆயுதந் தாங்கிய போராட்டத்தின் முன்னோடியாகத் திகழ்ந்து காட்டினர். இனப் பாகுபாட்டுக்கும், தொந்தரவுகளுக்கும் எதிராக பத்து நாட்களாக இரவும் பகலும் 20,000 துருப்புகளுடனும், பொலிஸாருடனும் அவர்கள் வீரச் சமர் புரிந்தனர். அவர்களுள் சிலர் பொலிஸாரிடமிருந்து ஆயுதங்களைப் பறித்து எவ்வாறு பொலிஸார் வேட்டையாடினரோ அவ்வாறே அவர்களையும் வேட்டையாடினர்.

கிட்டத்தட்ட அதே வேளையில், பத்து வருடங்களுக்கும் மேலான ஆபிரிக்க-அமெரிக்கர்களின் பெருமளவிலான பலாத்காரப் போராட்டம் சிகாகோவிலும் வெடித்தது.

1966 மார்ச்சிலும் மேயிலும், பிற்போக்குப் பொலிஸாரோடு போராடுவதற்காக லோஸ் ஏஞ்செல்ஸ் வாழ் கறுப்பு மக்கள் பல தடவை ஆயுதமேந்தினர். ஹார்லெமிலும் வோட்ஸிலும் தமது போராட்டத்தைத் தொடர்ந்து, ஜூலை மாதம், அமெரிக்காவின் இரண்டாவது பெரிய நகரமான சிகாகோவில், ஆபிரிக்க-அமெரிக்கர்கள் நிறப் பாகுபாட்டுக்கெதிரான தமது மூன்றாவது பிரம்மாண்டமான போராட்டத்தை அவர்கள் துவங்கினர். சுமார் 1000 பொலிஸாரின் கொடூரத்தனமான அடக்குமுறைக்கு மத்தியில், பொலிஸாரோடு அருகருகே நின்று போராடுவதற்கு ஆபிரிக்க-அமெரிக்கர்கள் செங்கற்களையும் வெடி போத்தல்களையும் ஆயுதங்களாகப் பாவித்தனர். பொலிஸ் அவர்கள் மீது சுட்ட போது, அங்கு ஒரு துப்பாக்கிப் பிரயோக யுத்தமே நடைபெற்றது.

கடந்த வருட கோடை காலத்தில், அமெரிக்காவின் 38 பிரதான, நடுத்தர நகரங்களில் கறுப்பு மக்களின் பலாத்காரப் போராட்டங்கள் வெடித்தெழுந்தன.

## ஏகாதிபத்தியத்துக்கு அதன் எல்லைக்குள்ளேயே கசையடி

ஆபிரிக்க - அமெரிக்கர்களின் பலாத்காரப் போராட்டங்கள் 1967-ல், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிற்போக்கு ஆட்சிக்கு, அதன் எல்லைக்குள்ளேயே வைத்து மூர்க்காவேசத்துடன் கசையடி கொடுத்து, பேரலையாக உருவெடுத்தன.

இவ்வாண்டு ஜனவரி முதல் மே வரையிலும், கறுப்பு மக்கள் ஆயுதந் தாங்கிய பொலிஸுக்கு எதிராக, பல்வேறு விதமான முறைகளில், பலாத்காரப் போராட்டங்கள்பன்னிரெண்டை நடத்தியுள்ளனர்.

இவ்வாண்டு கோடைகால ஆரம்பத்தில், ஆபிரிக்க-அமெரிக்கர்களின் போராட்டம் முன்னொன்றும் கேள்விப்பட்டிராத புயல் வேகத்தில் வளர்ச்சியுற்றது. ஜூன் மாத ஆரம்பத்திற்குள், அதாவது குறுகிய இரு மாத காலத்திற்குள்,

11-ம் பக்கம் பார்க்க

# ...தக் கதிகலக்கும் கறுப்பர் சக்தி

நெருப்பிட்டு, அன்றாடத் தேவைகளுக்கு வேண்டிய பொருட்களைக் கைப்பற்றினர்.

### வாலிபர்களின் பங்கு

இப்போராட்டங்களில், இருபது வயதுக்குட்பட்ட இளைஞர்கள் முக்கியமான அதிர்ச்சிப் படையொன்றை அமைத்தனர். அவர்கள் தம்மிடம் எதுவித ஆயுதங்களையும் கொண்டிராதபோது, ஆயுதந் ஜீவியம் நடத்தும் வழிகள் தடுக்கப்பட்டுள்ளனர்; அவர்களின் இதயங்கள் நீண்ட நெடுங்காலமாக கோபத்துடன் பொங்கிவந்துள்ளன. முதலாளித்துவப் பத்திரிகைகள் அவர்களை ''கோபமுற்ற நீக்ரோக்களின் தலை முறை'' என்று அழைக்கின்றன. அவர்களது தோற்றம், ஆபிரிக்க-அமெரிக்கர்களின் உறுதியும், சக்தியுமிக்க புதுத் தலை முறையொன்றின் வருகையை பிரகடனப்படுத்துகின்றது. இந்தச் சிறப்புக் குரிய அம்சம், இன்று ஆபிரிக்க-அமெரிக்கர்களின் இயக்கத்திற்கு விசேஷமான முக்கியத்துவத்தை அளித்துள்ளது.

நெவார்க்கிலும், டிட்ரோய்ட்டிலும் நடந்தது என்னவென்றால், ஆபிரிக்க-அமெரிக்கர்களின் சிந்தையை வெகுவாக உற்சாகப் படுத்தித் தூண்டிவிட்டதும், அமெரிக்க ஆளும் வட்டாரங்களின் திமிர் போக்கை அதைரியப்படுத்தியதுமேயாகும். ஆயிரக்கணக்கான பாசிஸத் துருப்புகளோடும் பொலிஸோடும் மோதி, அந் நகரங்களின் முன்னைய அமைதியைக் குழப்பிவிட்ட நெவார்க், டிட்ரோய்ட் வாழ் ஆபிரிக்க-அமெரிக்கர்களின் மனதில் ''அதிகார உணர்ச்சி'' இருந்ததாக மேற்கத்திய செய்தி நிறுவனமொன்று சந்தேகத்துடன் குறிப்பிட்டது. ''அப்படியான அதிகாரம் பற்றி அவர்கள் உணர்ந்த முதல் சந்தர்ப்பம் அது'' என்று அந்த நிறுவனம் மேலும் குறிப்பிட்டது. அதிகாரம் பற்றிய இளந்தளிர் மொட்டு போன்ற இந்த உணர்ச்சி, தேசிய ரீதியிலும், வர்க்க ரீதியிலும் பரிபூரணமாக அடிமைத் தளையை அறுத்தெறிவதற்கான ஆபிரிக்க-அமெரிக்களின் பயணத்தை நிச்சயமாக வேகப்படுத்தும் சரியாக இந்தக் காரணத்திற்காக, சிவில் யுத்தத்தின் பின்னர் அமெரிக்கா அறிந்த கடுமையான ''உள்நாட்டுநெருக்கடி'' தான் தற்போதைய ஆபிரிக்க-அமெரிக்கர்களின் போராட்டமென்று, அமெரிக்க ஆளும் வட்டாரத்தின் பிரதிநிதிகள் சிலர் அச்சத்துடன் கூப்பாடிட்டுள்ளனர். அவர்கள் இன்று அலறுவதைப் போன்று ''அமெரிக்காவின் எதிர் காலத்தைப் பற்றி'' வேறென்றுமே அச்சம் கொண்டு அலறியதில்லை.

### ஜோன்சனின் பீதி

ஆபிரிக்க - அமெரிக்கர்களைக் கசப்போடு வெறுக்கின்ற, அவர்களின் போராட்டத்தைக் கண்டு மரண பீதியடைந்துள்ள ஜோன்சன் நிர்வாகம், தனது சொந்த முகமூடிகளான ''சுதந்திரம்'', ''ஜனநாயகம்'' ஆகிய வற்றைப் பற்றி கொஞ்சமேனும் சிந்தனையில்லாது, மிகவும் மோசமான முறையில் வெடிப்படைந்துள்ளது. விமானப் படையொன்றுக்குத் தலைமை தாங்குவதற்காக வேண்டி, பாதுகாப்பு இலாகாவின் முன்னாள் காரியதரிசி சைரஸ் வான்ஸையும், தென் வியட்நாமிலுள்ள அமெரிக்க ஆக்கிரமிப்புப்படைகளின் முன்னாள் உதவி கமாண்டர் ஜோன் எல். த்ரோக்மோர்டொனையும், 10,000 காவல் படையினரோடும் பொலிஸாரோடும் டிட்ரோய்ட்டுக்கு இரத்தத்தில் நீச்சலடிக்க அனுப்பி வைத்தது, அமெரிக்க நிர்வாகம். (மேலே குறிப்பிடப்பட்ள்ள ஆகாயப் படைதான் ஒரு தடவை டொமினிக்கன் குடியரசு மக்களின் ஆயுதந் தாங்கிய எழுச்சியை நசுக்குவதற்காக அனுப்பி வைக்கப்பட்

11-ம் பக்கம் பார்க்க



**நீக்ரோக்களின் வீரப் போரை ஆதரித்த முதல் தலைவர்-மக்கள் யுத்தத்தின் சிற்பி -மா சே-துங்**

# "அஹிம்சாவாதப்" பிரம்மோபதேசம் அடிவருடுகிறது பாசிஸ்டுகளை

தாங்கிய துருப்பினரையும், பொலிஸாரையும் எதிர்த்து செங்கற்களோடும் போத்தல்களோடும் போராடினர். அவர்கள் துப்பாக்கிகளைப் பெற்ற பின்னர், டாங்கிகளுக்கும் ஹெலிகோப்டர்களுக்கும் எதிராகப் போராடினர். அவர்கள் பயமுற்றவர்ககள், பயமுறுத்தப்படமுடியாதவர்கள். பல நூற்றுண்டுகள் காலமாக பிற்போக்கு ஆளும் வர்க்கங்களிடம் அடிமையாக இருந்து, எல்லா விதமான கொடுமைகளையும் தாங்கிக் கொண்ட பழைய கதையொன்றில் வரும் அடிமையின் சுபாவம் இந்த ஆபிரிக்க-அமெரிக்க வாலிபர்களிடையே கிடையாது.

ஆபிரிக்க-அமெரிக்க வாலிபர்கள் எவரையும் திடுக்கிட வைக்கும் இன்னல்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர். அவர்கள் பாடசாலைகளில் படிப்பதற்கு அனுமதிமறுக்கப்பட்டுள்ளனர், வேலை வசதிகள் மறுக்கப்பட்டுள்ளனர். வீடின்றி விடப்பட்டுள்ளனர். அல்லது,

### கறுப்பு மக்களின் போராட்டத்தில் வெள்ளையர்களும் பங்கு

டிட்ரோய்ட் சம்பவங்களின் மற்றுமொரு குறிப்பிடத் தகுந்த அம்சம் யாதெனில், தமது கறுப்பு சகோதரர்களின் போராட்டத்தில் முதன் முறையாக பெருந்தொகையான ஏழை வெள்ளையர்கள் கலந்து கொண்டமையாகும். பாசிஸத் துருப்புகளுக்கும், பொலிஸாருக்கும் எதிராக அவர்கள் ஒன்றுபட்டு போராடியதோடு, தமது முதலாளித்துவச் சுரண்டல் காரர்களிடமிருந்து பெற்றெடுத்த வெற்றிகளின் பலாபலன்களை கூட்டாகப் பங்கிட்டனர். அவர்கள் இப்போராட்டத்தை பாசிஸக் கொடுமையாளர்களுக்கெதிரான ஆபிரிக்க-அமெரிக்கர்களின் ஆயுதந் தாங்கிய போராட்டமாக மட்டும் கருதவில்லை; மாறாக, ''இருப்போருக்கும், இல்லாதோருக்கும்'' இடையே நடக்கும் போர் என்றும் கருதுகின்றனர்.

## மா ஓவின் மணி மொழிகள்

### மக்கள் யுத்தம்

யுத்தத்தை நடத்துவதற்கு மிகப் பெரிய சக்திக் கருவூலம் வெகுஜனங்களில்தான் உள்ளது. பிரதானமாகச் சீன வெகுஜனங்களின் ஸ்தாபன ரீதியாகத் திரளாத நிலைமை காரணமாகவே ஜப்பான் எம்மை மிரட்டியுருட்டத் துணிகிறது. இந்தக் குறைபாடு நிவிர்த்திக்கப் பட்டதும் ஜப்பானிய ஆக்கிரமிப்பாளி, தீ வட்டத்துக்குள் இடித்துக் கொண்டு நுழையும் வெறி பிடித்த மாட்டைப் போல், நிமிர்ந்து நிற்கும் எமது கோடிக் கணக்கான மக்களால் சுற்றி வளைக்கப் படுவான். அவர்களின் குரல்களே அவனுக்குக் கிலி கொடுக்கும். அவன் எரிந்து சாவான்.

# ஆயுதமேந்திவிட்ட ஆபிரிக்க-அமெரிக்கன் அஞ்சி ஓடமாட்டான்

அமெரிக்க நீக்ரோக்கள், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நிற வெறிக்கெதிராக நடத்தும் நியாயமான போராட்டத்திற்கு ஆதரவாக தோழர் மா சே-துங், 1963 ஆகஸ்ட் 8-ம் திகதி வெளியிட்ட அறிக்கையின் 4-வது ஆண்டை முன்னிட்டு ஆபிரிக்க-அமெரிக்கர்களின் புரட்சிகரத் தலைவரும், பொங்கியெழும் கறுப்பு மக்களின் போரராட்டத்திற்குப் புரட்சிகரத் தெம்பளிப்பவருமான ரொபர்ட் எப். வில்லியம்ஸ் விடுத்த அறிக்கை.



**"ஜோன்சன் ஆட்சிக்கெதிராக மக்கள் யுத்தம்"- சிம்ம கர்ஜனை புரியும் ரொபர்ட் எப். வில்லியம்ஸ்**

இது மா சே-துங்கின் சகாப்தமாகும், உலகப் புரட்சியின் சகாப்தமாகும், ஒரு வெல்லற்கரிய உலகம் பரந்த இயக்கத்தின் பகுதி தான் ஆபிரிக்க — அமெரிக்கனின் விடுதலைக்கான போராட்டமாகும். எமது மக்களின் போராட்டத்தை உலகப் புரட்சியின் பட்டியலுக்கு உயர்த்திய முதல் உலகத் தலைவர் மா ஓ ஆவார். கிராமப்புற மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உலகின் சுரண்டப்படும் மக்களின் பெரும் வெகுஜனங்கள் நகரங்களைச் (சுரண்டுகின்ற கைத்தொழில் தேசங்களை) சுற்றி வளைக்கக் கூடிய மக்கள் யுத்தத்தின் கொள்கைகளுடன், ஆபிரிக்க—அமெரிக்க புரட்சியாளர்கள் நகரத்தில் சக்திமிக்கதோர் மறைமுக நகரைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். எமது மக்கள், மக்கள் யுத்தத்தை மேலும் விருத்தியுறச் செய்வதோடு, அதில் வல்லவர்களாகுவர். ஒவ்வொரு போராட்டமும் தலைவர் மா ஓ வின் ஆகஸ்ட் 8, 1963 அறிக்கைக்கும் கிடைக்கும் வெற்றிகரமான ஞாபகச் சின்னமாக விளங்கும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தினது இனவாதத்தின் கொடுமைக்கெதிராகப் போராடுவதில் முன்னெப்போதையும் விட அச்சமற்றவர்களாக நாம் முன் வருவோம். தலைவர் மா சே-துங் கூற்றினால் நாம் என்றும் உத்வேகங் கொள்வோம்.

'' காலனியாதிக்கத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் கொடூர முறை நீக்ரோக்கள் மீதான அடிமை முறையோடும், நீக்ரோக்களின் வியாபாரத்தோடும் வெளிக்கிளம்பி, வளர்ச்சியுற்றது; அத்துடன் அது கறுப்பு மக்களின் அடிமைத்தனை சம்பூரணமாக அறுத் தெறியப்படுவதுடன் கட்டாயமாக முடிவுக்கு வந்தே தீரும்.''

ஆகஸ்ட் 8, 1963-ல், மக்கள் யுத்தத்தின் சிற்பியான தலைவர் மா சே-துங் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இன

11-ம் பக்கம் பார்க்க

# இந்தியப் புரட்சியின் ஒளி விளக்கு

# இன்று உயர்த்தப்பட்டுவிட்டது

—5-ம்பக்கத் தொடர்

அளித்தது. 1946-லிருந்து 1951-வரையும், கேரளா, மேற்கு வங்காளம், உத்தர பிரதேசம், திரிபுரா, மணிப்பூர், அஸ்ஸாமின் காரோ குன்றுகள் ஆகியவற்றில் விவசாயிகளின் ஆயுதப் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பின.

## சீனப் புரட்சியைத் தாக்கினர்

தெலுங்கானு ஆயுதந் தாங்கிய போராட்டம் அதன் ஆரம்பத்திலிருந்தே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்ப்-புரட்சித் திரிபுவாதிகளினது எதிர்ப்புக்கும் நாச வேலைக்கும் இலக்காகியது. முதலில் அவர்கள், அது ''ஐக்கிய முன்னணியைச் சீர்குலைப்பதாக'' அவதூறு கூறியதோடு, பின்னர், சீனப் புரட்சியின் பாதையைப் பின்பற்றுவோரை ''விவசாயிகளின் தலைமை'' என்ற தத்துவத்திற்கு வக்காலத்து வாங்குபவர்கள் என்று கூறித் தாக்கினர். டாங்கேயும், படுபிற்போக்கான திரிபுவாதிகள் ஒரு சிலரும் விவசாயிகளின் ஆயுதந் தாங்கிய போராட்டங்களை ''அதி தீவிரவாதம்'' என்றும், ''தனிப்பட்டப் பயங்கரவாதம்'' என்றும் தாக்கியதுடன், அதைக் காட்டிக் கொடுக்க அவா கொண்டனர். இந்திய மக்கள் சீனப் புரட்சியின் பாதையை எடுப்பதை வலிப்புப் பிடித்துத் தடுத்து, 1950 செப்டம்பரில் விநியோகித்த கட்சி தஸ்தாவேஜு ஒன்றிலும் மீண்டும் 1951-ல் வெளியிட்ட பகிரங்க அறிக்கையொன்றிலும் தலைவர் மாசே-துங்கினுல் தலைமை தாங்கப்பட்ட சீன மக்களின் புரட்சிகரப் போரைத் தாக்கியதோடு, இந்தியாவின் ''தனியானத் தன்மை'' என்ற தத்துவத்தையும் முன்வைத்தனர்.

1951-ஜூன்மாதத்தில், ஒரு சில திரிபுவாதிகளினுல் கட்டுப்படுத்தப்பட்டிருந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகமிட்டி, தெலுங்கானு போராட்டத்தை சமரசம் மூலம் தீர்த்து வைப்பது பற்றித் தீர்மானமொன்றை நிறைவேற்றியது. ''தெலுங்கானுவில் மீண்டும் சமாதான நிலையைக் கொண்டுவருதல்'' என்ற நாமத்தில் காங்கிரஸ் அரசாங்கத்துடன் அவர்கள் சமரசத்திற்காகக் கையேந்தி நின்றனர்: ஜூலை மாதத்தில், உள்ளூர் அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்காக ஒரு தூதுகோஷ்டியினரை விரைவாக ஹைதராபாத்துக்கு அனுப்பி வைத்தனர். பேச்சுவார்த்தைகளின் போது அவர்கள் ஆயுதப் போராட்டத்திற்கு ஒரு முடிவேற்படும் பொருட்டு பின்வரும் குறைந்தபட்சக் கோரிக்கைகள் இரண்டை ஏற்றுக் கொள்ளுமாறு அரசாங்கத்திடம் முழந்தாளிட்டு கெஞ்சினர். முதலாவது, விவசாயிகளின் நிலங்களைப் பறிப்பதை நிறுத்துதல்; இரண்டாவது, கொரில்லாக்களுக்கு மன்னிப்பளித்தல். இக் கோரிக்கைகள் உள்ளூர் அரசாங்கத்தால் உறுதியான முறையில் நிராகரிக்கப்பட்டன. அதே ஆண்டு அக்டோபர் மாதத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி, சரணுகதியடையும் அறிக்கையொன்றை ஒருதலைப்பட்சமான முறையில் வெளியிட்டது. சகலவிதமான கொரில்லா நடவடிக்கைகளையும் நிறுத்துமாறும், தேர்தல்களில் காங்கிரஸைத் தோற்கடிக்க மக்களை அணி திரட்டுமாறும் தெலுங்கானு விவசாயிகளுக்கும் போராடும் கட்சியினருக்கும் ஆலோசனை கூற மத்திய கமிட்டி தீர்மானித்துள்ளதாக அறிக்கை கூறியது.

## போராட்டம் காட்டிக் கொடுக்கப்பட்டது

இவ்வாறு தெலுங்கானு ஆயுதந் தாங்கிய போராட்டம் காட்டிக் கொடுக்கப்பட்டது. புரட்சிகர விவசாயிகளை பெருவாரியாகக் கைது செய்வதும், சிறையிலிடுவதும், கொல்வதும் இந்தியப் பிற்போக்காளர்களால் கடைட்பிடிக்கப்பட்டன. ஆயுதந் தாங்கிய போராட்டத்தின் மூலமாக புரட்சிகர விவசாயிகள் பெற்ற வெற்றியின் சகல பலன்களும் இழக்கப்பட்டன.

கடந்த சகாப்தத்திலும் அதற்கும் மேலாகவும், விடுதலைக்காகத் தவிக்கும் இந்திய மக்களுக்கு தெலுங்கானு விவசாயிகளின் வீரமிகு ஆயுதந் தாங்கிய போராட்டம்ஆழ்ந்த படிப்பினைகளையும், பாரதூரமான தாக்கத்தையும் அளித்துள்ளது. மார்க்சிஸ-லெனினிஸ ஆடைக்குள்ளிருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திரிபுவாதிகளால் பேசப்பட்டு வந்த ''தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியைத் தோற்கடிப்பது'' என்ற பாராளுமன்றப் பாதையானது, இந்தியப் புரட்சிக்கு அப்பட்டமான துரோகமும் சவக்குழியுமாகும் என்பதை, பெரும் பின்வாங்கல்களுக்கும் கடும் தியாகங்களுக்கும் பின்னர் இந்திய மக்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர். மகோன்னத முதல்வர் தலைவர் மா சே-துங்கினுல் தலைமை தாங்கப்பட்ட சீனப் புரட்சியின் வெற்றிக்கான பாதையை, பாட்டாளி வர்க்கப் படைத் தலைமை கிராமப் புறங்களுக்குச் சென்று அங்கு விவசாயிகளின் ஆயுதந் தாங்கிய போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் புரட்சிகரப் பாதையை, கிராமப் புறங்களில் தளப் பிரதேசங்களை அமைத்து, நகரங்களைக் கிராமப் புறங்கள் மூலம் சுற்றி வளைத்து, இறுதியில் முழு நாட்டிலும் அரசியல் ஆதிக்கத்தைக் கைப் பற்றும் பாதைதான் உண்மையான விடுதலைக்கான பாதை என்பதை அவர்கள் உணரத் துவங்கியுள்ளனர். தம்மைக் கீழே வைத்திருக்கும் மலைகளான ஏகாதிபத்தியம், சோவியத் திரிபுவாதம், நிலப்பிரபுத்துவம், அதிகாரத்துவ முதலாளித்துவம் ஆகியவற்றை இந்த வழியில் தான் இந்திய மக்களால் தூக்கி எறிய முடியும், அத்தோடு தமது நாட்டின் உண்மையான எஜமானர்களாகவும் முடியும்.

## ஆட்சியின் திமிர் போக்குக்கு அடி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுள்ளிருக்கும் புரட்சியாளர்களும், டார்ஜீலிங் மாவட்டத்திலுள்ள நக்ஸல்பாரி வாழ் புரட்சிகர விவசாயிகளும் ஆயுதந் தாங்கிய போராட்டத்தின் ஜ்வாலைகளை மீண்டும் பிரகாசிக்கச் செய்துவிட்டனர். இது புரட்சிகர மக்களின் உணர்வை பெரிதும் தூண்டிவிட்டுள்ளது; கடுமையான முறையில் பீதியடைந்தும், சுதந்திரம் பெற்ற முதல் ஆண்டுகளில் உண்டான தெலுங்கானு போன்ற இயக்கத்தின் மறுபதிப்பே இது என்று கூப்பாடு இடவும் செய்யும் இந்திய பிற்போக்காளர்களின் திமிர் பிடித்த போக்குக்கு இது அடி கொடுத்துள்ளது; இந்த வேளையில், தலைவர் மா சே-துங்கின் படிப்பினைகளால் உத்வேகமடைந்துள்ள மக்கள், புரட்சியை அதன் இறுதி வரையிலும் கொண்டு செல்வதை எதுவுமே தடுத்து நிறுத்த முடியாது என்பதையிட்டு அவர்கள் பயமும் அடைந்துள்ளனர்.

### வியட்நாமில் அமெரிக்க உயிர்ச் சேதங்கள்

வியட்நாமில் அமெரிக்க துருப்புக்களின் உயிர்ச் சேதங்கள் 1966 ம் ஆண்டு முடிவதற்குமுள்ள சேதங்களைவிட 4,000 அதிகம் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

### அவர்களும் இவர்களும்

கனடாவில், மாண்ட்ரீல் என்னும் இடத்தில் இப்போது உலகக் கண்காட்சி ஒன்று நடைபெறுகிறது. அதில் அமெரிக்கக் கண்காட்சி நிலையத்திற்கு அருகில் தான் சோவியத் கண்காட்சி நிலையமும் இருக்கிறது.

★

லண்டனிலுள்ள உட்ஸ் வயித் அச்சகத்திலிருந்து இரு பத்திரிகைகள் வெளிவருகின்றன. ஒன்று அமெரிக்க வார ஏடு: மற்றது சோவியத் யூனியனின் ''நியூஸ் வீக்''.

# ஏகாதிபத்தியக் கூட்டில் சேர யூ.என்.பி. தீவிரம்

தனது ''நடு நிலைமை'' பற்றி இந்த ஏகாதிபத்தியத் தொண்டனுன யு. என். பி. ஆட்சி என்னதான் கூப்பாடு போட்டு, தம்பட்டமடித்துக் கொள்ளட்டுமே! ஆனுலும், அதன் நடவடிக்கைகள் அதனது வர்க்கத் தன்மையைத் தெட்டத் தெளிவாகக் காட்டி விடுகின்றன. யூ. என். பி-தனது ''நடு நிலைமை'' கொள்கையில் இப்பொழுது மேலும் ஒரு விளக்கத்தைச் சேர்த்துள்ளது.

தென் கிழக்கு ஆசிய தேசங்களின் சங்கம் (ஏ. எஸ். ஈ. ஏ. என்.) என்று புதிய ஸ்தாபனமொன்றில் அங்கத்தவராகுவதற்கு அது விண்ணப்பித்துள்ளது. இந்தப் புதிய ஸ்தாபனமானது, ஆறு ஆண்டுகளுக்கு முன்பதாக உருவாக்கப்பட்டு கேலிக் கூத்தாகியுள்ள தென் கிழக்கு ஆசிய சங்கத்தின் (ஏ. எஸ். ஏ.) 1967-ம் வருஷத்தைய நவீன மாடலாகும். இந்த ஏ. எஸ். ஏ. ஆனது, பிலிப்பைன்ஸ், ''மலேஷியா,'' தாய்லாந்து போன்ற நாடுகளால் அமைக்கப்பட்டு, இது வரையிலும் ஒரு சர்வதேசியத் திட்டத்தையேனும் இடுவதற்கு கையாலாகாததாக ஆகியுள்ளது. புதிய சங்கத்தில் புதிய இந்தோனேஷியாவும் சிங்கப்பூரும் சேர்க்கப்பட்டுள்ளன. யூ. என். பி-யின் கீழுள்ள புதிய இலங்கையும் சேருவதற்கு விண்ணப்பித்துள்ளது.

புதிய சங்கத்தில் சேர்வதற்கு இலங்கை செய்துள்ள விண்ணப்பத்தை இலங்கை வானெலியின் செய்திஅறிக்கையொன்றின் போது அறிவிக்கையில், எந்த அந்நிய நாட்டினதும் தலையீட்டைத் தடை செய்வதே புதிய சங்கத்தின் நோக்கமாகும் என்று கூறப்பட்டது.

இந்த மாதிரியான தளர்ந்த அறிக்கையைத்தான் விடுக்க முடியுமேயன்றி வேறென்ன செய்ய முடியும்?

இந்தோனேஷியாவைத் தவிர மற்றெல்லா நாடுகளிலும் அமெரிக்க, பிரிட்டிஷ் தளங்கள் இருக்கின்றன. இந்தோனேஷியாவில் என்ன நடந்த தென்பதைத் திருப்பிப் பார்க்க வேண்டியதில்லை.

இந்தக் கூட்டுத்தான் தன்னை ''நடு நிலைமை'' என்று கூறிக் கொள்வதோடு, எப்படியான அந்நியத் தலையீட்டையும் தடுப்பதற்குத் திடசங்கற்பம் பூண்டுள்ளது!

ஏகாதிபத்திய முகாமிலுள்ள ஆசிய நாடுகளின் புதிய தந்திரம்தான் இது. பிலிப்பைன்ஸ் அநேகமாக ஒரு அமெரிக்கப் பிராந்தியம். தாய்லாந்து ஆசியாவிலுள்ள பலமான அமெரிக்கத் தளமாகும். பூரணமாக அமெரிக்காவினுல் பாவிக்கப்பட்டு வருகிறது. அங்கிருந்துதான் வியட்நாமிற்கெதிரான ஆக்கிரமிப்பு யுத்தம் நடத்தப்படுகிறது. சிங்கப்பூர் பெரும் பிரிட்டிஷ் தளம். ''மலேஷியா'' ஒரு பிரிட்டிஷ் சிருஷ்டியாகும். பிரிட்டன் அங்கிருந்து தனது துருப்புக்களை ''வாபஸ் பெறப்'' போவதையிட்டு அது கவலை கொண்டுள்ளது. ஒரு காலத்தில் ஆசிய-ஆபிரிக்க உறுதிப்பாட்டு இயக்கத்துக்குத் தலைமை வகித்த இந்தோனேஷியா ஏகாதிபத்திய முகாமினுள் வீழ்ந்துள்ளதுடன், படுவேகமான முறையில் அதல பாதாளம் நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

பண்டாரநாயக்கவின் கீழ் இலங்கையும் ஆசிய-ஆபிரிக்க முகாமுக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது அதன் குரல் காலனியாதிக்கக் கட்டுக்கோப்பினுள்ளிருந்து வெடித்து வருகின்ற ஆசிய-ஆபிரிக்க நாடுகளில் வெகுவாக மதிக்கப்பட்டு வந்தது. எனவே ஏகாதிபத்திய அடியார்களான தாய்லாந்து, ''மலேஷியா,'' பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளோடு நாம் உறவு கொண்டிருக்கவில்லை,

இப்பொழுது யூ. என். பி. ஆட்சி புதிய ஏகாதிபத்தியக் கைக்கூலி ஸ்தாபனத்தினுள் நுழைவதற்காக ஏக்கப்பெருமூச்சு விட்டுக் கொண்டிக்கிறது. அதே வேளையில் எம்மை ஒரு மேன்மை தங்கிய அபேட்சகனுக ''மலேஷியா'' ஆதரவு தெரிவித்துப் பேசியிருக்கிறது.

# —பலாத்காரத்தின்—
# சிருஷ்டிகர்த்தாக்கள் யார்?

**இளங்கீரன்**

**ஆளும் வர்க்கமான பிற்போக்குக் கும்பலும். அதன் பிரச்சார ஊதுகுழல்களான ஏகபோகப் பத்திரிகைகளும் கம்யூனிஸ்ட் கட்சியினரான எம்மை பலாத்காரவாதிகள், விஷமிகள், குழப்பத்தைத் தூண்டி விடுபவர்கள் மத நம்பிக்கை அற்றவர்கள் என்றெல்லாம் பெரும் பிரச்சாரம் செய்து வருகின்றன.**

**ஆளும் வர்க்கமே, உனக்கும் உனது அரசுக்கும்**

**பலாத்காரத்தில் நம்பிக்கை இல்லையானால்**

**உனக்கு பொலிசும், பட்டாளமும் ஏன்?**

இது ஒன்றும் புதுமையல்ல சென்ற நூற்றாண்டிலியிருந்தே" கார்ல் மார்க்ஸ், எங்கெல்ஸ் காலத்திலிருந்தே - உலகம் பூராவிலுமுள்ள சுரண்டல் வர்க்கத்தாரும், பிற்போக்கு வாதிகளும், மதகுருமாரும் இதே பிரச்சாரத்தைத் தொடர்ந்தும் செய்துதான் வருகின்றனர். இலங்கையிலும் கூட இப் பிரச்சாரம் புதியதல்ல. இந் நாட்டிலுள்ள பாட்டாளி மக்களின் கட்சியான கம்யூனிஸ்ட் கட்சி தோன்றியதிலிருந்து இந் நாட்டிலுள்ள ஆளுகின்ற சுரண்டும் வர்க்கமும் அதனுடைய பிற்போக்குப் பத்திரிகைகளும் கம்யூனிஸ்ட் இயக்கத்தைப் பற்றியும், மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகளைப் பற்றியும் பலரகமான எத்தனையோ கட்டுக்கதைகளையும், பொய்யும் புனைச் சுருட்டும் கொண்ட குப்பைக் கூளங்களையும் அவிழ்த்து விட்டுக் கொண்டுதான் இருக்கின்றன. இப்போது வட-பகுதியில் நடைபெறும் சாதி ஒழிப்பு இயக்கத்தையும், ஆலயப் பிரவேச இயக்கத்தையும் ஒட்டி இப் பிரச்சாரத்தை மேலும் தீவிரப்படுத்தியுள்ளன. அது மட்டுமல்லாமல் இன்னும் ஒரு படி மேலே சென்று, சீனாவின் ஆணையை ஏற்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி கலவரத்தைத் தூண்டி விடுவதாகவும் கயிறு திரிக்கின்றன. சாதிப் பிரச்சினையைப் பற்றி பீகிங்குக்கும் யாழ்ப்பாணக்குடா நாட்டுக்கும் முடிச்சுப் போட்டுக் கதையளக்கும் முதலாளித்துவப் பத்திரிகைகளின் பிரச்சாரத்தைப் பற்றிச் சென்ற வாரம் 'தொழிலாளி' பதில் அளித்துள்ளதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

## பலாத்காரத்தின் சிருஷ்டி கர்த்தாக்கள் யார்?

ஆளும் வர்க்கமான சுரண்டல் கும்பல் எம்மை பலாத்காரத்தில் நம்பிக்கை உடையவர்கள் என்று பிரச்சாரம் செய்வதன் மூலம், சுரண்டும் வர்க்கமும் அதன் ஊத்தை பிடித்த ஊது குழல்களான முதலாளித்துவப் பத்திரிகைகளும் தாங்கள் ஏதோ சாந்த மூர்த்திகள் என்றும், அகிம்சையின் அவதாரம் என்றும் காட்டி மக்களை ஏமாற்ற முனைகின்றன. ஆனால், உண்மை என்ன?

வரலாற்றைப் பார்த்தால் சொத்துடைமை வர்க்கமான சுரண்டுகின்ற ஆளும் கும்பல் தான் பலாத்காரத்தின் உண்மையான சிருஷ்டி கர்த்தாக்கள் என்பதை நன்கு தெரிந்து சொள்ளலாம். ஆண்டான்—அடிமை காலந் தொட்டு இன்றைய முதலாளித்துவ காலம் வரை சமுதாயத்தில் ஆளும் வர்க்கமாக இருந்துவரும் கரண்டல்காரர்கள்தாம் தமது சொத்து சுகங்களையும், ஆட்சி அதிகாரத்தையும் பாதுகாக்கும் பொருட்டு பொலிஸ் படையையும், இராணுவப் படையையும் சிருஷ்டித்து வைத்துக் கொண்டு அதனைப் போஷித்து வருகின்றனர். பலாத்காரக் கருவிகளான இந்தப் படை பட்டாளத்தைத் தமது பக்கத்துணையாக வைத்துக் கொண்டே தமது சுரண்டல் ஆதிக்கத்தையும், அடக்கு முறைகளையும் நடத்தி வருகின்றனர் என்பதை மறுக்க முடியுமா? அது மட்டுமல்லாமல் சுரண்டப்பட்டவர்களும், அடக்கி ஒடுக்கப்பட்டவர்களும் சுரண்டலையும், ஆளும் வர்க்கத்தின் அநியாயங்களையும் எதிர்த்தெழுந்த போதெல்லாம் அவர்கள் தமது நியாமான கோரிக்கைகளுக்காகப் போராடிய போதெல்லாம்-சுரண்டும் பிற்போக்குக் கும்பல் தனது பொலிஸ் படையைக் கொண்டும், பட்டாளத்தைக் கொண்டும், காடையர்களான குண்டர்களைக் கொண்டும் அவர்களைப் பலாத்காரமாக அடக்க வில்லையா? ஈவிரக்க மின்றிச் சுட்டுக் கொல்லவில்லையா? சிறைக்கூடங்களில் தள்ளிச் சித்திரவதை செய்ய வில்லையா? தூக்கிலே போட்டுத் துடிதுடிக்கக் கொலை செய்ய வில்லையா?

## இவர்களின் எஜமானர்கள் செய்வது என்ன?

இவர்களின் எஜமானர்களான, பெரும் சுரண்டும் முதலைகளான ஏகாதிபத்திய வாதிகள் பலாத்காரத்தைப் பாவிக்கவில்லையா? பெரும் உலக யுத்தங்களை மூட்டி விட்டு ஒன்றும் அறியாத அப்பாவி மக்களைக் கோடிக்கணக்கில் கொன்று வைக்கவில்லையா? இன்றும் கூட சர்வதேச ரீதியாகக் கொடூரமான பலாத்காரக் கொடுமைகள் புரியவில்லையா? எத்தனையோ நாடுகளில் தமது படை பட்டாளத்தைக் கொண்டு மிகவும் கொடூரமான—படுபயங்கரமான யுத்தங்களை நடத்தவில்லையா? ஒரு பாவமும் அறியாத வியட்நாமியரைப் படுகொலை செய்து வரவில்லையா? இவையெல்லாம் பலாத்காரம் இல்லையா?

## ஆயுதத் தொழிற்சாலைகளின் அதிபர்கள் யார்?

பலாத்கார ஆயுதங்களை இன்று தொன் கணக்கில் உற்பத்தி செய்து முதலாளித்துவ நாடுகளிலுள்ள பிற்போக்கு அரசாங்கங்களுக்கும். ஆளும் வர்க்கத்திற்கும் விற்றுக் கொண்டிருப்பது ஏழைக் கந்தனும், செல்லையாவும், சில்வாவும், இஸ்மாயிலும் கம்யூனிஸ்டுகளுமா? அமெரிக்கா, பிரிட்டன், மேற்கு ஜெர்மனி போன்ற ஏகாதிபத்திய, முதலாளித்துவ நாடுகளிலுள்ள சுரண்டும் முதலாளித்துவ ஏகபோகக் கொள்ளைக்காரர்களல்லவா துப்பாக்கித் தொழிற்சாலைகளையும், பீரங்கித் தொழிற்சாலைகளையும் வைத்துக்கொண்டிருப்பவர்கள், இந்த ஆயுதங்களையும், போர்க் கப்பல்கள், போர் விமானங்கள், அணு குண்டுகள் ஆகியவற்றையெல்லாம் உற்பத்தி செய்வது எதற்காக? ஆளும் வர்க்கத்தின்—சுரண்டும் கும்பலின் ஆதிக்கத்தைப் பலாத்கார உருவத்தில் பாதுகாக்கத் தானே? பாட்டாளி வர்க்கத்தின் மீதும் அவர்களுக்காகப் பரிந்து நிற்போர் மீதும் பாவிக்கத்தானே? உரிமைக்காகவும், விடுதலைக்காகவும் போராடும் மக்கள் மீதும் அவர்களுக்குத் தலைமை கொடுக்கும் கம்யூனிஸ்டுக்கள் மீதும் தாக்குதல் தொடுக்கத் தானே! இவையெல்லாம் பலாத்காரமில்லையா?

## இலங்கையிலும் நடப்பதென்ன?

இலங்கையில் கூட பலாத்காரத்தைப் பாவிப்பவர்கள் யார்? சுரண்டுகின்ற ஆளும் வர்க்கமும் அதன் அரசும் தானே? அவர்கள் பொலிஸ் படையையும் பட்டாளத்தையும், காடையர்களான குண்டர்களையும் கொண்டு உரிமை கோரும் மக்கள் மீதும், கோரிக்கைகளுக்காகப் போராடும் பாட்டாளி வர்க்கத்தின் மீதும் பலாத்காரம் பாவித்ததில்லையா? வேலை நிறுத்தப் போராட்டங்களிலும் சரி, உரிமைப் போராட்டங்களிலும் சரி மக்களோ தொழிலாளி வர்க்கமோ ஆயுதங்களை வைத்துக் கொண்டு நிற்பதில்லை என்பதும், அவர்கள் வெறுங் கையுடன் நிற்பார்கள் என்பதும் எல்லோரும் ஒப்புக்கொள்வர், ஆனல், மாறாக, முதலாளி வர்க்கமும் அதன் அரசும் தான் துப்பாக்கிகளோடும், இதர ஆயுதங்களோடும் நிற்கிறது என்பதை மறுக்க முடியுமா? இதற்கு எத்தனையோ உதாரணங்களைக் காட்டலாம்.

வேலை நிறுத்தங்களும் உரிமைப் போராட்டங்களும் ஒரு புறமிருக்கட்டும். சாதாரண ஊர்வலங்களையும் பொதுக் கூட்டங்களையும் எடுத்துக் கொள்வோம். ஊர்வலங்களையும் பொதுக் கூட்டங்களையும் நடத்த மக்களுக்கு உரிமை உண்டு. ஆனல், ஜனநாயகத்தைப் பற்றி வாயளவில் உரக்கக் கூச்சலிடும் பிற்போக்கு ஆளும் வர்க்கத்தின் அதிகாரத்தின் கீழுள்ள இந் நாட்டில் பொலிஸ் அனுமதியின்றி ஊர்வலமோ, கூட்டமோ நடத்த முடியாது. அப்படி மீறி நடத்தினல் பொலிஸ் பலாத்காரத்தைப் பாவித்து அவற்றைக் கலைக்கும். அப்படி குண்டாந்தடிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகை பிரயோகமும், துப்பாக்கிப் பிரயோகமும் செய்து கலைத்திருக்கிறார்களே, இது பலாத்காரமில்லையா? அதுவும் ஊர்வலம், பொதுக் கூட்டம் ஆகிய வற்றில் கலந்து கொள்ளும் மக்கள் ஆயுதங்கள் கொண்டு வருவதில்லை. ஆனல் ஆயுதத்தோடு வருபவர்கள் ஆளும் வர்க்கத்தின் பொலிசார்தான்; ஆயுதத்தால் தாக்குவதும் அவர்கள் தான். இது பலாத்காரமில்லையா?

## வட-பகுதியில் நடப்பது என்ன?

நூற்றாண்டு காலமாக மேல் சாதி எனப்படுவோரால் மிகவும் கொடூரமாக அடக்கி ஒடுக்கப் பட்டுக் கிடந்த தாழ்த்தப்பட்டோர் எனப்படும் மக்கள், இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இக் கொடுமை இருக்கக் கூடாது, இனியும் இதனைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம் எனக் கூறுகிறார்கள்; தம்மையும் மனிதர்களாக நடத்த வேண்டும் எனக் கோருகிறார்கள். இதில் என்ன தவறு இருக்கிறது? பலாத்காரம் இருக்கிறது? அதுவும் அரசாங்கத்தின் சமூகக் குறைபாட்டுச் சட்டத்தின் படியும், சமீபத்தில் நீதிமன்றங்கள் அளித்த தீர்ப்பின் படியும் ஆலயம், தேனீர் கடை மற்றும் பொது இடங்களுக்குள் போக உரிமை உண்டு எனக் கோருகிறார்கள்; அதன் அடிப்படையில் பிரவேச இயக்கத்தை நடத்துகிறார்கள். அவர்கள் ஆலயங்களுக்குள்ளும் மற்றும் பொது இடங்களுக்குள்ளும் போகும் போது கத்தி, துவக்குகளோடு போக வில்லையே! ஆனல், மாறாக அவர்களைத் தடுக்க ஆயுதங்களோடு பலாத்காரம் புரிவது ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த சாதி வெறியர்களல்லவா? சட்டத்தை அமுல் நடத்தக் கோருவோர் மீது, சட்டத்தை மீறும் ''மேல் சாதி''க்காரர்களல்லவா பலாத்காரம் புரிகிறார்கள்! தாக்குகிறார்கள்! ''சட்டத்தின் பாது காவலர்'' எனப் படும் பொலிசாரோ சட்டத்தை மீறும் ''மேல் சாதி''க் காரருக்குப் பக்கத் துணையாக இருக்கிறார்கள். இல்லையென்றால் சட்டத்தின்படி அவர்களல்லவா ஆலயப் பிரவேசத்தையும், மற்றும் பொதுநிலையப் பிரவேசத்தையும் நடத்தும் மக்களின் பக்கம் துணை நின்று, அதனை வெற்றிகரமாக நடத்த வேண்டியவர்கள்? அவர்கள் எதிர் மாறாக நடந்து கொண்டும் இருக்கிறார்கள். இந்த நிலையில் ஒடுக்கப் பட்ட மக்கள் என்ன செய்ய முடியும்? ''மேல் சாதிக்காரர்கள்'' தாக்கும்போது அவர்களும் தற்காப்புக்காகத் திருப்பித் தாக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற் குள்ளாகிறார்கள். அதாவது முதலில் பலாத்காரத்தைப் பாவிப்பவர்கள் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த சாதி வெறியர்களும் அவர்களுக்கு ஒத்து ஊதும் பொலிசாருமே. அவர்களின் பலாத்காரத்திலிருந்து தம்மைத் தற்காத்துக் கொள் உரிமைக்காகப் போராடும் மக்கள் எதிர் பலாத்காரம் செய்ய வேண்டி நேரிடுகிறது. இது தவிர்க்க முடியாதது. ''மேல் சாதிக்காரர்'' எனப்படுவோர் பலாத்காரம் பாவிக்காமல், பொலிசாரும் தலையிடாமல் சட்டத்தின்படி ஆலயப் பிரவேசத்திற்கும் மற்றும் பொது நிலையப் பிரவேசத்திற்கும் அனுமதித்தால் - தாக்காமல் சமாதானமாகப் போக விட்டால், ஒடுக்கப்பட்ட மக்களும் எதிர் பலாத்காரத்தைப் பாவிக்க வேண்டிய அவசியமே இராதே! ஆகப் பலாத்காரத்தைப் புரிகிறவர்களும், எதிர் பலாத்காரத்தைத் தூண்டி விடுவோரும் அந்தப் பக்கத்தார்தான்.

பலாத்காரத்திற்கும், புரட்சிக்கும் வித்திடுபவர்களும் தூண்டிவிடுவோரும் ஆளும்

10-ம் பக்கம் பார்க்க

# ராஜூ-ஒரு கள்ளத் தோணி

யாழ்ப்பாணக் கல்லூரியின் சிறந்த மாணவராக விளங்கிய கார்த்திகேசு என்பவரின் மகன் தான் ராஜூ. கார்த்திகேசுவின் தந்தையார் பெரும் வெள்ளாளச் சாதியைச் சேர்ந்தவர். இவர் பின்னர் கிறிஸ்துவ மதத்தைத் தழுவி, தன் வாழ்வின் பிற்பகுதியைத் திருச்சபைப் பாதிரியாகக் கழித்தார். இவரின் குடும்பமோ பெரிது. எனவே குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு இவரின் மகனாகிய கார்த்திகேசுவின் மேல் வீழ்ந்தது. கார்த்திகேசு தனக்குப்பரிசில்களாகக்கிடைத்த புத்தகங்களை விற்று, அவற்றில் கிடைத்த பணத்தைக் கொண்டு இந்தியா சென்று கல்கத்தா பல்கலைக் கழகத்தில் பி. ஏ. பட்டம் பெற்றார். இவர் இலங்கைக்குத் திரும்பிய பின்னர், அந் நாட்களில் இலங்கையில் கல்விமான்கள் என்று கருதப் பட்டவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.

இவர் இந்தியாவிலிருந்த போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஓர் அழகிய பெண்ணைத் திருமணம் செய்து, ஒரு மகனுக்குத் தந்தையானார். ராஜூ எனப் பெயரிடப்பட்ட இவருடைய மகன் பின்னர் இலங்கைக்கு வந்து, இலங்கையிலேயே கல்வி கற்று இலங்கை அரசாங்க இலாகாவொன்றில் மிகப் பெரிய பதவியை வகித்தார். இவர் இவ் இலாகாவில் 25 வருடங்களுக்கு மேலாக பதவி வகித்த பின்னர் இளைப்பாறி, தற்பொழுது ''நன்றி மறவாத'' இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெருந் தொகையான பென்ஷன் சம்பளம் பெற்றுக் கொண்டிருக்கின்றார்.

ராஜூவின் மகள் திருமணம் செய்த பின்னர் மணமக்கள் இருவருக்கும் அமெரிக்க அரசாங்கம் அளித்த ''ஸ்கோலர்ஷிப்'' ஒன்றின் மூலம் அவர்கள் இருவரும் அமெரிக்காவுக்குப் பயணமானார்கள்.

இவர்கள் இருவருக்கும் அங்கு ஒரு மகன் பிறந்தான். இவர்கள் அப்பிள்ளையை இலங்கையராகப் பதிவு செய்ய முயன்ற போது அமெரிக்காவிலுள்ள இலங்கை ஸ்தானிகராலயம், பிள்ளையின் பாட்டனார் இந்தியாவில் பிறந்தவரென்ற காரணத்தைக்காட்டி பதிவுசெய்ய மறுத்து விட்டது. எனவே, ராஜூ ஒரு கள்ளத்தோணியாகக் கருதப்பட்டார்.

இக் கதையை இங்கு கூறுவதற்குக் காரணம் யாதெனில், இலங்கை பிரஜை யாரென்பதை நிர்ணயிப்பதில் எந்தளவுக்குக் கீழான நிலைக்குப் போய் விட்டோமென்பதைக்

**குமார்**

காட்டுவதற்கேயாகும். அபிவிருத்தியடைந்த நாடுகளில், தொடர்ச்சியாக ஐந்து வருடங்களுக்கு மேலாக வசித்து, தொடர்ந்தும் அங்கு வசிக்க விரும்புவதாகத் தெரிவிக்கும் எவரும் அந் நாட்டுப் பிரஜை யாவதற்கு உரித்துடையவர். ஒரு மனிதன் வேலை செய்வதும், வேலை செய்ய விரும்புவதும் தான் மிக விலையுயர்ந்த பொருளென்பதை அந் நாட்டினர் அறிவர்.

துரதிர்ஷ்டவசமாக, ஆசியாவில் இப் பிரச்சினை அரசியலுடன் கலந்து விட்டது. உலகிலேயே மிகப் பெரிய சனத்தொகையையுடைய நாடுகளான சீனவும், இந்தியாவும் ஆசியாவிலுள்ளன: நூற்றாண்டுகள் காலமாக, இவ்விரு நாடுகளிலிருந்தும் உலகின் மறு பகுதிகளுக்கு அடிமைகளாகச் சென்றனர். அவ்வவ் நாடுகளில் சீனர்களதும், இந்தியர்களதும் வியர்வையிலிருந்தே முதலாளிமார் பணத்தைச் சேர்த்தனர். அநேகமாக இக் கூலிகள் சுரங்கங்களிலும் தோட்டங்களிலும் வேலை வாங்கப் பட்டனர்.

இன்று, ஆசியாவில் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள போது, அத் தொழிலாளர்களின் சந்ததியினர் பிரச்சினைக் குரியவர்களாக்கப் பட்டுள்ளனர். இலங்கையில் நாமும் இப் பிரச்சினைக்கு முகங்கொடுக்க வேண்டியவர்களாயுள்ளோம். இலங்கை — இந்தியப் பிரச்சினையானது, எந் நேரமும் எரிந்து கொண்டிருக்கும் ஒரு பிரச்சினையாகும்.

நாம் ஐந்து லட்சம் தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்றும் நிலையிலுள்ளோம். முதலாம் தரத் தொழிலாளர்களாகிய இவர்கள், நமக்கு அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தரும் தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வேலை செய்பவர்கள்.

மலைநாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான மைல்கள் நீளமுள்ள தேயிலைத் தோட்டங்கள் கண்டிய விவசாயிகளைச் சீரழித்தன என்பது உண்மையே. ஆனால், அத் தோட்டங்கள் தொடர்ந்தும் வெள்ளையர்களுக்குச் சொந்தமாக இருக்கையில், இந்தியத் தொழிலாளர்களை நாடு கடத்துவது கண்டியர்கள் இழந்த நிலத்தை அவர்களுக்குத் திரும்பவும் பெற்றுக் கொடுப்பதற்கு எவ்வாறு உதவப் போகிறது என்பது எமக்கு விளங்கவில்லை.

தோட்டங்களிலுள்ள இந்தியத் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு இந்தியத் தொழிலாளர்கள் எவ்விதத்திலும் பொறுப்பாளிகள் அல்ல. உணர்ச்சி வசப்பட்ட கட்சி அரசியலில் சிக்கியது தான் அதன் உண்மையாகும். இந்நாட்டிலுள்ள முற்போக்கு அணியினராகிய இந்தியத் தொழிலாளர்களினாலேற்படக் கூடிய அபாயத்தை முதன் முதலில் உணர்ந்தவர் டி. எஸ். சேனநாயக்கவேயாவார். இதை உணர்ந்தவுடன் அவர் தோட்டத் தொழிலாளர்களை வாக்குரிமையற்றவர்களாக்கினார். அந்நாளிலிருந்து அவர்கள் இந் நாட்டிலேயே பிறந்து வளர்ந்த போதிலும் நாடற்றவர்களாகியுள்ளனர். பிரிட்டிஷ் தோட்டச் சொந்தக்காரர்களினால் நிலம் பறிக்கப்பட்ட கண்டிய விவசாயிக்கும் கீழ்ப் பிரதேச சிங்களத் தொழிலாளிக்கும் அவர்களின் பிரச்சினைகள் யாவற்றிற்கும் இந்தியத் தொழிலாளர்களே காரணமெனக் கூறப்பட்டுள்ளது. அத்துடன் இத் தோட்டத் தொழிலாளர்கள் எல்லோரையும் இந்நாட்டிலிருந்து கடத்திய பின்னர் அவர்களுக்குப் பொற்காலம் உதயமாகுமென்றும் கூறப்பட்டுள்ளது. எனினும் இதனை எவ்வாறு அடைய முடியுமென்று எவ்வாறு இன்று வரை ஒரு அரசியல் வாதியாவது கூறவில்லை.

ஆகவே, இந்தியாவுடன் தொடர்புடைய எவரும் வெளியேற வேண்டும். இதனாலேயே ராஜூ கள்ளத்தோணியாக்கப்பட்டுள்ளார்.

என்றுதான் எமது பிரச்சினைகளுக்கு நாம் முகங் கொடுப்போமோ?

## மந்திரி 'மம்மது'க்குக்
# கறுப்புக்கொடி

வேலையில்லாத் திண்டாட்டம், வீடில்லாப் பிரச்சனை போன்றவற்றிற்குக் காரணகர்த்தாவான எமது மார்க்சிஸ விரோத ''சூரப்புலி'' எம்எச். முஹம்மாதானவர், தனது முழு நேரத்தையும் இலங்கையில் முதலாளித்துவத்தின் பாதுகாப்பிற்காகச் செலவிடும் பணியில் முழு மூச்சாக ஈடுபடுத்தியுள்ளார். அவர் இம் மாதம் 4-ம் திகதியன்று மாத்தளையில் ''மார்க்சிஸ விரோதக்'' கூட்டமொன்றில் பேசுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அவர் மாத்தளை செல்லும் வழியில் முழுக்க முழுக்க முஸ்லிம் பிரதேசமான அக்குறணையைக் கடக்க வேண்டியிருந்தது. அமைச்சர் முஹம்மதின் முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் போராட்டத்தில் அவரோடு ''தோளோடு தோள் பூண்ட'' நண்பரும் அக்குறணை இரண்டாவது எம். பி. யுமான ''மகஜர்'' ஹமீது அக்குறணை வீதிகளில் முகமதுக்கெதிராகக் கறுப்புக் கொடிகள் பறப்பதைக் கண்டார்! பொலிஸாரைக் கொண்டு அக் கொடிகளை நீக்க வேண்டி அவர் நிர்ப்பந்திக்கப் பட்டார். முஸ்லிம் பிரதேசமொன்றிலேயே முஹம்மது-ஹமீது கம்பனிக்கு செல்ல முடியவில்லை ஐயோ பாவம், அமெரிக்க-இஸ்ரேலிய விருந்தாளிகளின் மார்க்சிஸ எதிர்ப்பும், சீன எதிர்ப்பும்.

6-ம் பக்கத் தொடர்

## பலாத்காரத் ....

வர்க்கமும், அவர்தம் அரசாங்கமும்தானேஒழிய, மக்களல்ல. சரித்திரம் நெடுகிலும் இந்த உண்மைதான் பளிச்செனப் பரந்து கிடக்கிறது. கார்ல் மார்க்ஸ் ஒரு தடவை கோர்ட்டில் பின்வருமாறு கூறினார்: அரசாங்கம் புரட்சியைத் தூண்டி விடுமானால் மக்கள் புரட்சியின் மூலமாகத்தானே பதில் செல்ல வேண்டும்?

வட-பகுதியில் நடப்பது இதுதான். ஆனால் ஆளும் வர்க்கமும் அதன் பிரச்சாரக் குழல்களான பத்திரிகைகளும் உண்மையை மூடி மறைத்து எம்மைப்பார்த்துப் பலாத்கார வாதிகள் என்கின்றன. பச்சைக் குடிகாரன் மது விலக்குப் பிரச்சாரம் செய்வது போலல்லவா இது இருக்கிறது!

கம்யூனிஸ்டுகள் என்றுமே தமது கருத்தை-உண்மையை மறைத்தது கிடையாது. தூக்கு மேடையில் நின்று கொண்டும் உண்மையை உலகறிய முழக்கமிடுபவர்கள் அவர்கள். இன்றல்ல, ஆரம்பத்திலிருந்தே இந்த உண்மையைக் கூறிவருகிறார்கள்.

அதாவது ஆளும் வர்க்கமும் அதன் அரசும் கூட பலாத்காரத் தன்மையுடையவைதாம். பலாத்காரத்தில் நம்பிக்கை உடையவைதாம். இல்லாவிட்டால் அவற்றிற்குப் பொலிஸ் படை ஏன்? பட்டாளம் ஏன்? ஆளும் வர்க்கமும் அதன் அரசும் பலாத்காரத் தன்மையுள்ளவையாக இருப்பதால்தான் கம்யூனிஸ்டுகளும் பலாத்காரத்தில் நம்பிக்கை வைக்க வேண்டியிருக்கிறது. ஆளும் வர்க்கமும், அதன அரசும் பலாத்காரம் பாவிக்கும் போது—பலாத்காரத்தைப் பாவித்து மக்களை அடக்கி ஒடுக்கும் போது-சுரண்டப்பட்ட, அடக்கி ஒடுக்கப் பட்ட மக்கள் வேறு வழியில்லாததால் தம்மைப் பாதுகாக்க எதிர் பலாத்காரம் பாவிக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகிறது. சுரண்டுகின்ற ஆளும் வர்க்கமும் அதன் அரசும் ஆட்டுக் குட்டியாகவும், பசுவாகவும் இருக்கவில்லை. கரடியாகவும், புலியாகவும் இருக்கின்றன. இதிலிருந்து பலாத்காரம் யாரிடமிருந்து பிறக்கிறது என்பது தெளிவாகிறதல்லாவா? இந்நிலையில் ''அஹிம்ஸை''யைப் பற்றியும் சமாதனத்தைப் பற்றியும் உபதேசிப்பது வெறும் ஏமாற்றலலவா?

# வெடிக்குமடா புரட்சி

**"கே"**

வெட்கங் கெட்ட மனுசா — மீண்டும்
வீட்டுக்குள் நுழைவது மேன் — என்
மக்களின் எலும் பெண்ணவோ — இல்லை
மண்ணள்ளிப் போட்டிடவோ?

தாயே, தப்பியே தங்கை மாரே — என்று
ததிக்கனந் தோம் போட்டாய் அன்று — பாவி!
தரித்திரங்குடி கொண்ட வீட்டிலின்று — உன்
'தங்கக்' கால் பட்டிடலாமோ?

'பாலும் தேனும் பாயும் — நாங்கள்
பதவிக்கு வந்தோமெண்டால் — வேளா
வேளைக்குத் தீன் கிடைக்கும்' — எண்டல்லோ
வீராப்புப் பேசிச் சென்றாய்.

'அரிசியோ சம்பா, அமெரிக்கன் — மாவா?
அப்பிள் பழமென்ன? அழகான — திராட்சை
அத்தனையும் தருவோம் — நாங்கள்
அவ்வளவும் மலிவு.'

'சீமைச் சாமான் மலிவு — பெண்டுகள்
சிலுக்குச் சேலை மலிவு — மைனரின்
சிகரெட்டும் சிறுசுகள் — பால் மாவும்
சீப்பு சீப்பு — வெரி சீப்பு'.

'சிலோனே சீப்பு' என்டாய் — 'எம்மிடம்
சிம்மாசனம் தந்திட்டால்' — சிறிமா
சீட்டை விட்டே விரட்ட — கால் தொட்டு
ஓட்டுப் பிச்சை கேட்டாய்.

ஐயையோ மோசம் போனேன் — சோறின்றி
அடிவயிறெரியலானேன் — பாலின்றி
அந்தோ என் கண்ணும் செத்தான் — நாளின்றி
அழுது கதறலானேன்.

இன்னும் எதற்கு வந்தாய் — எமனே!
'எலக்ஸன்' தந்திரமோ — இனி நான்
ஏமாற மாட்டேனடா — மிளகாய்
என் தலையில் அரைக்க,

நுழையாதே வீட்டுக்குள்ளே — பாவியே!
நொந்திடும் கால் உனக்கு — தொற்று
நோய்கள் பிடித்திடுமே — இருட்டில்
பேய்கள் அடித்திடுமே!

கொஞ்சம் பொறுத்துக் கொள்ளு — மக்கள்
கொதித் செழுந்திடுவார் — துரோகி
வெஞ்சமர் புரிந்திடுவார் — சில நாளில்
வெடிக்குமடா புரட்சி.

# புரட்சிகர வழியில் சிங்கள - தமிழ் மக்கள் ஐக்கியம் காண்போம்!

## மட்டு. நகர் மாபெரும் கூட்டத்தில் எஸ்.டி. பண்டாரநாயக்காவின் அறைகூவல்

இம் மாதம் 13ம் திகதி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மட்டக்களப்புப் பாட்டாளிபுரத்தில் நடைபெற்ற மிகப் பிரமாண்டமான கூட்டத்தில் கம்பஹ எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்க, உரை நிகழ்த்துகையில் இந்நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவதற்குள்ள ஒரே வழியான புரட்சிகரக் கொள்கையின் அடிப்படையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் ஐக்கியத்திற்காக அறைகூவல் விடுத்தார். இந்த நோக்கத்தின் மீது தான் நம்பிக்கை கொண்ட காரணத்தினாலேயே இந்த நோக்கத்தின் வெற்றிக்காக வேண்டி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர் சண்முகதாசனுடன் சேர்ந்து வடக்கேயும், தெற்கேயும், கிழக்கேயும் கூட்டங்களில் கலந்து கொள்வதாக அவர் கூறினார்.

முதலாளித்துவப் பாராளுமன்ற ஜனநாயகத்தை விமர்சித்துப் பேசுகையில் திரு. எஸ். டி., பாராளுமன்றத் திருடர்களின் குகையே தவிர வேறொன்றுமில்லையென்றும், அதனுள்ளிருந்து பொது மக்கள் எப்படியான சீர்திருத்தத்தையும் எதிர் பார்க்க முடியாது என்றும் கூறினார். புரட்சி செய்யாத முறையில் மக்கள் தமது கடினமான வாழ்க்கை நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என்ற மார்க்சிஸ — லெனினிஸத் தத்துவத்தைத் தான் முற்று முழுதாக நம்புவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

### தோழர் சண் பேச்சு

அதே கூட்டத்தில் சொற்பொழிவாற்றிய தோழர் என். சண்முகதாசன் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களைப் பூரணமாக ஏமாற்றி விட்டது என்று கூறினார். சமஷ்டி ஆட்சி கைகூடும் வரையுலும், சிங்களம் மட்டும் சட்டம் கிழித்தெறியப்படும் வரையும் எந்த அரசாங்கத்திலும் மந்திரி பதவி ஏற்க மாட்டோமென்று பெரும் கூப்பாடிட்ட தமிழரசுக் கட்சித் தலைமை இன்று நாட்டின் முன்னேற்றப் பயணத்தைத் தடுக்கவும், பிற்போக்கு நலன்களைப் பாதுகாக்கவும் வேண்டி, யூ. என். பி. பிற்போக்காளர்களோடு கைகோர்த்து இயங்குகின்றது.

யூ. என். பி.—தமிழரசு ஐக்கியம் உண்மையான தேசிய ஐக்கியத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லையென்று தோழர் சண் சுட்டிக் காட்டினார். அவர் மேலும் பேசுகையில், கூறியதாவது; அந்நிய ஏகாதிபத்தியத்தின் தொடர்ச்சியான சுரண்டலுக்கு இந்த நாட்டு மக்களை, (சிங்களவர்களையும், தமிழர்களையும்) பலியிடுவதற்கான சிங்கள-தமிழ் மக்களிடையேயுள்ள பிற்போக்கு சக்திகளின் ஐக்கியத்தைத் தான் அது பிரதிநிதித்துவப் படுத்துகிறது.

12-ம் பக்கம் பார்க்க

—7-ம் பக்கத் தொடர்

## ஆயுதமேந்தி . . .

ஒதுக்கலுக்கு எதிரான அமெரிக்க நீக்ரோக்களின் போராட்டத்தை ஆதரித்து சரித்திர பிரசித்தமான அறிக்கையொன்றை வெளியிட்டார். இனவாத, ஏகாதிபத்திய அமெரிக்காவில் ஒடுக்கப்பட்ட கறுப்பு மக்கள் நடத்தும் போராட்டம் பற்றிய இன்றைய உண்மைகள் அவர்களுக்காகப்பேசுகின்றன. போராட்டத்தின் இயற்கையும், தீவிரமும், உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் பற்றிய மா சே-துங் சிந்தனையின் தாக்கத்திற்கு மறுக்க முடியாத சாட்சியத்தைக் கொண்டுள்ளன. உலகெங்குமுள்ள தமது மற்றைய ஒடுக்கப்பட்ட சகோதரர்க போல, ஆபிரிக்க—அமெரிக்கர்கள் தமது போராட்டத்தின் தன்மையை புதிய புரட்சிகரத் துறையை நோக்கி உயர்த்த உற்சாகங் கொண்டுள்ளனர். தலைவர் மா சே-துங் ஆகஸ்ட் 8, 1963-ல் கூறிய வார்த்தைகளின் தவறற்றத் தன்மை, ஏகாதிபத்தியவாத, கொடுங்கோல் அமெரிக்காவின் குறுக்கேயும் நெடுக்கேயும் ஆயுதந் தாங்கிய எழுச்சியாக எழும்பியுள்ளது.

''அமெரிக்க நீக்ரோக்கள் விழித்தெழுகின்றனர்; அவர்களின் போராட்டம் மென் மேலும் பலமாக வளர்கிறது. இன ஒதுக்கலுக்கு எதிராகவும், சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்குமான அவர்களது வெகுஜனப் போராட்டத்தின் தொடர்ச்சியான விஸ்தரிப்பை சமீபத்திய வருடங்கள் நிரூபித்துள்ளன'' என்று தலைவர் மா ஓ தனது உலகப் புகழ் பெற்ற அறிக்கையில் கூறினார்.

சாத்வீகமான போராட்டத்திற்கான போலி இயக்கம் அப்படியே நம்பிக்கையிழந்து விட்டதோடு, மேலும் மேலும் விடுக்கப் பட்ட கறுப்பு மக்கள் ஆயுதந் தாங்கிய புரட்சிகரப் போராட்டப் பாதையை நோக்கித் திரும்புகின்றனர். ஆபிரிக்க — அமெரிக்கர்களின் விடுதலைப் போராட்டம் பிரதான அமெரிக்க நகரங்களை அமிழ்த்தியும், பற்றி எரியச் செய்வதையும் போன்றே, ஜோன்சன் நிர்வாகமும் வீர மிகு எழுச்சியை நசுக்கியொடுக்கும் அதன் இட்ர் நிறைந்த முயற்சிகளின் போது என்றிலும் பார்க்க வெறி கொண்டதாகவும், கொடூரத்தனமிக்கதாகவும் ஆகியுள்ளது. அது கறுப்பு மக்களையும் அவர்களது தலைவர்களையும் கைது செய்வதையும் ஒருதலைப் பட்சப் போக்கையும் மேற் கொண்டுள்ளது. தனது பாசிஸக் கொடுங்கோலாட்சியின் இன்னல்களை நீண்ட நெடுங்காலமாக அனுபவித்துவரும் அப்பாவிகளைக் கொல்லவும் காயப்படுத்தவும் வேண்டிய அது நவீன போர் ஆயுதங்களினால் ஆயுதபாணியாக்கப்பட்ட துருப்புகளை ஆயிரக்கணக்கில் அனுப்பி வைக்கிறது.

ஆபிரிக்க—அமெரிக்கர்ளது சுதந்திரப் போராட்டத்தின் அலைதடுக்கப்பட முடியாதது. ஜோன்சனின் கொடூரத்தனமான ஒடுக்கு முறை நடவடிக்கைகள் யாவும் ''பாறையைத் தூக்குவது தன் சொந்தக் காலில் போட்டுகொள்வதற்கே'' தவிர வேறெதற்குமில்லை. மக்கள் யுத்தத்தின் ஜுவாலைகளை கொடுங்கோலர்களால் அணைக்கவே முடியாது

7-ம் பக்கத் தொடர்

## அமெரிக்க ஏகா. .

டது என்பது குறிப்பிடத் தக்கது.) அத்தோடு அவர்களுக்கு உறுதுணையாக டாங்கிகளும், கவச வாகனங்களும், ஹெலிகோப்டர்களும் பாவிக்கப்பட்டன. நெவார்க்கிலும் டிட்ரோய்ட்டிலும் மட்டும் சுமார் 60 ஆபிரிக்க—அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்; சுமார் 4000 பேர் காயப்படுத்தப்பட்டன, 6,000 தொட்டு 7,000 பேர் வரையும் கைது செய்யப்பட்டனர் என்று பூரணத்துவமற்ற புள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

### ஜோன்சனின் ஏமாற்று வித்தை

ஆபிரிக்க-அமெரிக்கர்களுக்கு ஜோன்சன் செலுத்த வேண்டிய புதிய இரத்தக் கடனும் இது. அதே வேளையில், எதிர்ப்புரட்சி இரட்டைத் தந்திரங்களின் மூலமாக ஆபிரிக்க-அமெரிக்கர்களின் போராட்டத்தை அணைக்கும் முயற்சியில், தேசிய ரீதியான ''சமாதானத்திற்கும் அமைதிக்குமான'' அழைப்பு என்ற ஏமாற்றுத் தந்திரமொன்றை ஜோன்சன் கையாண்டார். ஆனால், போராட்டமோ மேலும் தீவிரமாகி பெருநெருப்பாக உருவெடுத்து, மற்றும் பல நகரங்களுக்கும் வேகத்துடன் பரவியது. ஜூலை 31-ம் திகதியன்று, தேசிய ரீதியான ''சமாதானத்திற்கும் அமைதிக்குமாக'' ஜோன்சன் பயங்கொள்ளித்தனமாக ''வேண்டிய'' பின்னர், ஆபிரிக்க-அமெரிக்கர்களின் போராட்டம் வெள்ளை மாளிகையிலிருந்து ஒரு மைல் தூரமுள்ள இடத்திலேயே வெடித்துக் கிளம்பியது.

விழித்தெழுகின்ற, விழித்தெழுந்துவிட்ட ஆபிரிக்க-அமெரிக்கர்கள், பாசிஸ அடக்குமுறையினால் அடக்கப்படவோ, அல்லது ஜோன்சன் தேன் பூசிய வார்த்தைகளால் ஏமாற்றப்படவோ முடியாது என்பதற்கு இது ஓர் அத்தாட்சி. தமது சுதந்திரத்திற்கும் விடுதலைக்குமான பயணத்தில் ஆபிரிக்க-அமெரிக்கர்கள் பல்வேறு விதமான இடையூறுகளை அனுபவிக்கவும், ஏராளமான தடைகளுக்கெதிராக இயங்கவும் இருந்த போதிலும், அவர்களது போராட்டம் என்றும் பலமிக்கதாக வளர்வதோடு, இறுதி வாகையைக் நிச்சயமாக சூடியே தீரும். தலைவர் மா சே-துங் சுட்டிக் காட்டியுள்ளது போன்று, ''உலக மக்களின் 90 சத விகிதத்திற்கும் மேற்பட்டோரின் ஆதரவுடன், ஆபிரிக்க-அமெரிக்கர்கள் அவர்களது போராட்டத்தில் வாகை சூடுபவர்களாவர். காலனியாதிக்கத்தினதும் ஏகாதிபத்தியத்தினதும் கொடூர முறை, நீக்ரோக்கள் மீதான அடிமை முறையோடு, நீக்ரோக்களின் வியாபாரத்தோடும் வெளிக் கிளம்பி, வளர்ச்சியுற்றது; அத்துடன் அது கறுப்பு மக்களின் அடிமைத்தனை சம்பூரணமாக அறுத்தெறியப்படுவதுடன் நிச்சயமாக முடிவுக்கு வந்தே தீரும்.''

-6ம் பக்கத் தொடர்

## எதிர்ப் புரட் . . . .

வாஷிங்டன், நியூயோர்க் சிகாகோ, பிலாடெல்பியா, லோஸ் ஏஞ்செல்ஸ், டிட்ரோய்ட், சான்பிரான்சிஸ்கோ அட்லாண்டா போன்ற பிரதான நகரங்கள் உட்பட பத்தொன்பதுக்கும் அதிகமான நகரங்கள்ல் தற்பாதுகாப்புக்கான கறுப்பு மக்களின் ஆயுதந் தாங்கிய போராட்டம் பீறிட்டுக் கிளம்பியது. துருப்புகளையும் பொலிஸையும் தாக்குவதில் மட்டும் கறுப்பு மக்கள் தமமைக் கட்டுப்படுத்திக் கொள்ளவில்லை. டாம்பாவில், வெடி மருந்துகளையும் ஆயுதங்களையும் விற்கும் கடையொன்றை உடைத்து, தம்மை ஆயுதபாணியாக்குவதற்காக அங்கிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றினர். ஆபிரிக்க-அமெரிக்கர்கள் சரியான கொரில்லாத் தந்திரோபாயங்களைக் கையாண்டு, பாசிஸத் துருப்புகளையும் பொலிஸையும் அடிக்கடி அங்குமிங்குமாகச் சிதறி ஓடும் வண்ணம் பின் தொடர்ந்து விரட்டினர்கள்.

### பெரும் பெரும் போராட்டங்கள்

ஜூலை 12 முதல் 19 வரை, நெவார்க்கிலும், நியூ ஜேர்ஸியிலுமுள்ள ஆயிரக்கணக்கான ஆபிரிக்க-அமெரிக்கர்கள், அமெரிக்க ஆளும் கும்பலை எதிர்த்து கிளர்ச்சி செய்ய வீதிகளுக்கு வந்தனர், ஆயுதந் தாங்கிய போராட்டங்களுக்கும் மேற்படியாக, அவர்கள் தம்மைச் சுரண்டி வந்த வெள்ளை நிற வெறியர்கள் கடைகள் பலவற்றிற்கு நெருப்பு வைத்ததுடன், அக்கடைகளிலுள்ள தானியங்களையும், துணிமணிகளையும் தம்மிடையே பங்கிட்டுக் கொண்டனர். 1965 ஆகஸ்டில் வோட்ஸிலும், லோஸ் ஏஞ்செல்ஸிலும் நடைபெற்ற போராட்டங்களின் பார்க்கும் போது, அளவிலும் உருவிலும் இதுவே பெரிய ஆபிரிக்க-அமெரிக்கர்களின் பலாத்காரப் போராட்டமாகும்.

ஜூலை 23-ம் திகதி காலையில் டிட்ரோய்ட்டில் வெடித்தெழும்பிய ஆபிரிக்க-அமெரிக்கர்களின் போராட்டம் அளவில் வோட்ஸ் போராட்டத்தையும் தாண்டியதோடு, ஆபிரிக்க-அமெரிக்கர்களின் போராட்டச் சரித்திரத்திலே பயங்யரமானதுமாகும். அவர்களின் எழுச்சியை நசுக்குவதற்காக வேண்டி, சமஷ்டி பாராதுருப்பினர் முதன் முறையாக ஜோன்சன் நிர்வாகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டனர். ஹெலிகோப்டர்கள், டாங்கிகள், கவசவாகனங்கள் ஆகியவற்றின் துணையோடு கிட்டத்தட்ட இருபதினாயிரம் துருப்புகளதும் ஆயுதந் தாங்கிய பொலிஸினதும் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறை இருந்த போதிலும் கூட, கறுப்பு மக்கள் கொடூரத்தனமான படையினரையோ, தியாகங்களையோ கண்டு அச்சம் கொள்ளாது. தமது எதிரிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். போராட்டத்தின் போது முதன் முறையாக அவர்களால் இயந்திரத் துப்பாக்கிகள் (மெஷின் கன்) உபயோகிக்கப்பட்டன. அவர்கள் ஆயிரத்து முன்னூற்றுக்கும் மேற்பட்ட கட்டிடங்களுக்கு நெருப்பு வைத்ததுடன், வீதிகளிலிருந்த எல்லா கடைகளையும் எரித்து வீழ்த்து, முழு நகரையுமே ஸ்தம்பிக்கச் செய்தனர்.

ஆகஸ்ட் 1-ம் திகதியன்று, இன ஒடுக்குமுறைக்கெதிரான கறுப்பு மக்களின் ஆயுதந் தாங்கிய போராட்டம் முதற் தடவையாக வாஷிங்டனில் எழுந்தது. ஆபிரிக்க-அமெரிக்கர்கள், வெள்ளை மாளிகைக்கும் தலை நகருக்கும்- ஒரு மைலுக்கும் குறைவான தூரமுள்ள இடங்களிலுள்ள கடைகளைத் தீக்கிரையாக்கி, கள்ளத்தனமாய் ஓடித்திரிந்த பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து, பொலிஸ் கார்களை உடைத்து நொறுக்கினர். நிலைமை அமெரிக்க ஆளும் கும்பலைத் திகிலடைய வைத்தது. அமெரிக்காவில் ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட காலத்துள் நிகழும் ''பயங்கரமான உள்நாட்டு நெருக்கடி'' என்லு அவர்கள் அதனை வர்ணித்தனர்.

### பாசிஸ அமெரிக்க ஆட்சி முறியடிக்கப்படுவது நிச்சயம்

கடந்த நான்கு ஆண்டுகளில் நிறப் பாகுபாட்டுக் கெதிரான ஆபிரிக்க — அமெரிக்கர்களின் வீரஞ்செறிந்த போராட்டம் தலைவர் மா ஓ வின் 1963-ம் ஆண்டைய அறிக்கையின் கூர்மையை தீர்க்கமான முறையில் நிரூபித்துள்ளது: ''அமெரிக்க நீக்ரோக்கள் விழித்தெழுகின்றனர், அவர்களின் போர் மென் மேலும் பலமாக வளர்கிறது. இன ஒதுக்கலுக்கு எதிராவும், சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்குமான அவர்களது வெகுஜனப் போராட்டத்தின் தொடர்ச்சியான விஸ்தரிப்பை சமீபத்திய வருடங்கள் நிரூபித்துள்ளன.'' இரண்டு கோடிக்கும் மேற்பட்ட ஆபிரிக்க—அமெரிக்கர்களினதும், அமெரிக்கா வாழ் சகல புரட்சிகர மக்களினதும் போராட்டத்தின் கொந்தளித்தெழும் பேரலைகளினால் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பாசிஸ ஆட்சி விழுங்கி ஏப்பம் விடப்படுவது நிச்சயம்.

# இலங்கை-சீன நல்லுறவை நாசப்படுத்த சதி

இலங்கைக்குப் பருப்பு வழங்குவதற்காகச் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை மதித்து நடப்பதில் இந்தியா தவறி விட்டது என்ற விஷயத்தை எமது பத்திரிகைகளில் நாம் பரிபூரணமாக அம்பலப்படுத்தியது, கொழும்பிலும் புது டில்லியிலுமுள்ள இந்திய அதிகாரிகளைக் கதி கலக்க வைத்துள்ளது.

இந்த விஷயம் எவ்வாறு பகிரங்கமாயிற்று என்பதையிட்டு தம்மால் சேகரிக்கக் கூடிய சகல விதமான தகவல்களையும் சேகரித்துக் கொண்டு, விசாரணை செய்து, உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு புது டில்லி உயர் வட்டாரங்கள் கொழும்பிலுள்ள இந்திய வட்டாரங்களுக்கு ஆணையிட்டுள்ளது.

ஏகாதிபத்திய, திரிபுவாதச் சக்திகளுடன் கழட்ட முடியாதத் தொடர்பையேற்படுத்திருக்கும் இந்திய உளவு சேவை புது டில்லியினால் பொறுப்பளிக்கப்பட்ட விசேஷ வேலையைச் செய்து முடிப்பதில் தோல்வி கண்டுள்ளது.

இலங்கை-சீன ரப்பர்-அரிசி ஒப்பந்தம் புதுப்பிக்கப்படுவதைத் தடை செய்யச் சூழ்ச்சி புரியும் புது டில்லி ஆட்சியாளர்கள், எமது நெருக்கடி மிகுந்த பொருளாதாரத்திற்கு உதவியளிப்பதற்காக சீனத்தை எமது அமைச்சக வட்டாரங்கள் முன்னென்றுமில்லாத முறையில் போற்றிப் புகழ்ந்து பேசி வருவதை மேற்கோள் காட்டி ''தொழிலாளி''யில் அடிக்கடி வெளிவந்த விஷயங்களால் விரக்தியடைந்துள்ளனர்.

உலகின் ஒரு பகுதிக்குத் தலைமை தாங்குவதற்கு நம்பிக்கையற்ற முறையில் பிரயத்தனம் பூண்டு வரும் பெரிய சகோதரனை இந்தியா, தனக்குத் தெற்கேயுள்ள சிறிய சகோதரனுக்குப் பருப்பு வழங்கும் சிறிய ஒப்பந்தத்தையேனும் சரியான முறையில் மதித்து நடக்காவிட்டால், இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பொருளாதாரக் கூட்டுறவு ஏற்படுத்துவது பற்றிப் பேச அதற்கு என்ன உரிமை இருக்கிறது?

இலங்கையின் தரம் குறைந்த தேயிலைக் கையிருப்பை முழுமையாக இந்தியா வாங்கிக் கொள்ள முன் வந்திருப்பதாகக் கூறப்படுவது, சீனத்துடனுள்ள வெற்றிகரமானதும், பலமானதுமான பொருளாதாரக்கூட்டுறவிலிருந்து இலங்கையை இழுத்தெடுக்கச் செய்யப்படும் சூழ்ச்சியின் முன்னறிவித்தலும், ஆழ்ந்தாராய்ந்த செயலும் என்பதில் எதுவித சந்தேகமுமில்லை.

கூட்டான இந்திய—அமெரிக்க—ரஷ்ய ஒற்றர் சேவையின் சிருஷ்டியான மேற்குறிப்பிட்டுள்ள இந்திய வியாபாரம் தான் இலங்கை-சீன ஒத்துழைப்பை நாசப்படுத்துவதற்கான அடுத்த திட்டமாகும்.

எமது தேயிலைக் கொள்முதலுக்குள்ள நிபந்தனையாக, நாம் எமது ரப்பரை இந்தியாவோடு பண்டமாற்று செய்ய வேண்டுமென்று இலங்கையைக் கேட்கவுள்ளனர்.

தற்போது சீனவிற்கு ஏற்றுமதி செய்யப்படும் நமது ஷீட் ரப்பர் கொள்முதல் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு இந்தியப் பெரும் முதலாளிகள் குழாமொன்று, இரகசியத் தூதொன்றை மேற் கொண்டு, சில மாதங்களுக்கு முன்னர் இலங்கை வந்தது. ஆனால் அவர்கள் வெறுங் கையோடு நாடு திரும்பினர்.

## சர்வதேசிய ரீதியாக நடக்கிறது

சீன—இலங்கை அரிசி—ரப்பர் ஒப்பந்தம் இவ்வாண்டு அக்டோபரில் புதுப்பிக்கப் படவிருக்கிறது. அத்தோடு, இந்திய, அமெரிக்க, ரஷிய ஏகாதிபத்திய, திரிபுவாதக் கூட்டாளிகள், ஒப்பந்தத்தைச் சின்னபின்னப் படுத்துவதில் முழு பலத்தையும் பிரயோகித்து ஒன்று கூடியுள்ளனர்.

இது மட்டுமல்ல.

இந்த ஒப்பந்தத்தின் கழுத்தை நெரிக்க இந்த விஷமிகள் சர்வ தேசிய ரீதியில் ஒன்று திரண்டுள்ளனர். ஆசிய பொதுச் சந்தை மாநாட்டில் சேருவதற்கு இலங்கை செய்துள்ள விண்ணப்பம், அதை நடத்துகின்ற பட்டப் பகிரங்கமாக சோஷலிஸ விரோதிகளின் பிற்போக்குச் சூழ்ச்சியை நிறைவேற்றுவதை நோக்கமாகக் கொண்டதாகும்.

பாங்கொக்கில் இலங்கையின் அங்கத்துவத்திற்காக விண்ணப்பித்தவர்கள் தமது ஏகாதிபத்திய சார்புத் தன்மையை வெளிக் காட்டுகின்றனர். அமெரிக்கக் கைப்பாவையான இந்தோனேஷிய வெளிவிவகார அமைச்சர் ஆதம் மாலிக் தான் ஆசியப் பொதுச் சந்தையில் இலங்கையின் பிரவேசத்தைப் பிரேரித்தவர்.

சீனத்திற்கும் மற்ற ஆசிய நாடுகளுக்குமிடையிலான நட்புறவைச் சீர்குலைக்கும் பணியில்-கேடு அவலட்சணக் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கும் ஆசிய பொதுச் சந்தை உறுப்பினர்களின் முன்னால் ஐம்பது அமெரிக்க டாலர்களைக் கொண்ட பைகள் தொங்க விடப்பட விருக்கின்றனவாம்.

# சமாதானப் படை- தீர்மானம் என்ன?

இந்த அரசாங்கத்தை யார் நடத்துகின்றனர்? பிரதமர் டட்லி சேனநாயக்காவா, அல்லது இந் நாட்டிலுள்ள அமெரிக்க ஜனதிபதி ஜோன்சனின் கையாட்களா?

இந்த நாட்டில் ஒரு அரசாங்கம் இருந்த போதிலும், தாங்களே இந்நாட்டின் எஜமானர்கள் என்ற ரீதியில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஏஜெண்டுகள் நடந்து கொள்கின்றனர் என்பதையிட்டு நம்பத் தகுந்த ஆதாரம் இருக்கின்றமையால் தான் நாம் இவ்விரு கேள்விகளையும் எழுப்புகின்றோம்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்கள் ஏஜெண்டுகளும் தமக்கு ஏதோ உரிமையுள்ளதுபோல் எமது தாய் நாட்டின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் சென்று வருவதுடன் சகல பொது நிலையங்களின் பொது விவகாரங்களிலும் தலையிடுகின்றனர்.

சகல மக்களாலும் வெறுக்கப்படும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் ஏஜெண்டுகளினால் இந் நாட்டிலுள்ள உயர்தர அதிகாரிகளால் எடுக்கப்படும் எல்லாத் தீர்மானங்களும் முறியடிக்கப் படுகின்றன.

அமெரிக்க சமாதானப் படையினர் சம்பந்தமாக எழுந்துள்ள சில சம்பவங்கள் குறிப்பிடத் தக்கவையாகும்.

தாம் செயற்படும் துறைகளில் சமாதானத்தைத் தவிர மற்றவை யாவற்றையும் திணிக்கும் இப் படையினரைத் திரும்பவும் இலங்கைக்கு கொண்டு வருவதற்கு அமெரிக்கர்களினால் செய்யப்படும் முயற்சிகளை அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக நாம் குறிப்பிட்டதை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

ஏகாதிபத்திய வாதிகளினதும் அவர்களது உள்ளூர் ஏஜெண்டுகளினதும் நடவடிக்கைகளையிட்டு கவனமாக இருக்கும் 'தொழிலாளி' சில வாரங்களுக்கு முன்பு, அண்மையில் இலங்கைக்கு வந்த சமாதானப் படையின் தலைவியான திருமதி டிலன் திரும்பவும் தாய் நாட்டிற்குச் செல்ல வேண்டி ஏற்படுமென்று குறிப்பிட்டது நினைவிருக்கலாம்.

அமெரிக்க சமாதானப் படையினரைத் திரும்பவும் அழைப்பதற்கு நடவடிக்கை எடுத்த திட்ட, பொருளாதார அமைச்சை அச் சிபார்சை திரும்பவும் பரிசீலனை செய்யும்படி அரசாங்கம் கேட்டுக் கொண்டது.

நமது அண்டை நாடுகள் பலவற்றில் அமெரிக்க சமாதானப் படையினது செயற்பாட்டின் அனுபவங்களின் அடிப்படையில் இவ் விஷயம் பற்றிக் கவனமாகப் பரிசீலனை செய்த பின்னர் அரசாங்கத்தினால் சரியான முடிவு எடுக்கப் பட்டது.

இந்த ஸ்தாபனத்தின் நடவடிக்கைகள் அமெரிக்க உளவுக்கான ஒரு சூழ்ச்சி என அநேக ஆசிய நாடுகளிலுள்ள பாராளுமன்ற அங்கத்தினர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அமெரிக்க சமாதானப் படையினரின் அலுவல்களைக் கவனிக்கும் அமெரிக்க உத்தியோகத்தர்கள் இலங்கைக்கு வந்து பல்வேறு துறைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள தனாலேயே இந்நாட்டின் அரசாங்கத்தை நடத்துபவர் யார் என்ற கேள்வியை நாம் கிளப்பியுள்ளோம்.

இந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் முக்கிய அமைச்சுகளிலுள்ள ஒரு அடிவருடிகளைத் தம் கையில் சிக்க வைத்துக் கொண்டு நாட்டின் சகல பாகங்களிலுமுள்ள அநேக வாலிபர் முகாம்களுக்கு விஜயம் செய்கின்றனர்.

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கு இந்த அமெரிக்க ஏஜெண்டுகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகின்றோம். அல்லது சுற்றுப் பயணம் என்ற சாட்டில் இங்கே வந்து ஏகாதிபத்தியவாதிகளினது உள்ளூர் அடிவருடிகளின் உதவியுடன் கள்ளத்தனமாக இங்குள்ள வாலிபர் முகாம்களுக்கு விஜயம் செய்கின்றனரா?

---

11-ம்பக்கத் தொடர்

## புரட்சிகர வழி . . .

யூ. என். பி-யினதும், தமிழரசினதும் இரண்டரை ஆண்டு கால சீர் கெட்ட ஆட்சியில் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமைகள் அளிக்கப்படவோ அல்லது சிறந்த வாழ்க்கை நிலைமை வழி வகுக்கப்படவோ இல்லை. மாறாக, எமது நாட்டின் பொருளாதாரத்தை அந்நிய ஏகாதிபத்தியத்தின் வண்டிச் சக்கரங்களோடு மென் மேலும் இறுக்கமாகப் பிணைப்பதன் விளைவாக, யூ. என். பி-யும் தமிழரசும் மக்கள் வயிற்றில் அடித்துள்ளன. அரிசி வெட்டுக்கெதிராக ''தமிழ் மக்களின் நலன்களின் பாதுகாவலர்களிடமிருந்து ஒரு விதமான'' கண்டனத்தையும் நாம் கேள்விப் படக் கூடவில்லை.

மக்களின் பிரச்சினைகள் எவற்றையும் பாராளுமன்ற முறை மூலமாகத் தீர்க்க முடியாது என்பதை தோழர் சண் சுட்டிக் காட்டினர் எமது நாட்டு மக்கள் 1931.லிருந்து வாக்களித்து வருகின்றனர். மாறாக, பிரச்சினைகள் மேலும் மேலும் மோசமாகியுள்ளன. மக்களை முட்டாள்களாக்குவதற்கும், உண்மையான அதிகாரம் இருக்கும் இடமான ஆயுதந் தாங்கிய படைகளிடமிருந்து மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கும் வேண்டி முதலாளி வர்க்கத்தினரால் கண்டு பிடித்து அமைக்கப்பட்டது தான் பாராளுமன்றம் என்பதை எமது மக்கள் உணர வேண்டும் என்றார்.

எம்மை ஒடுக்குபவர்களின் கைகளிலுள்ள துப்பாக்கிகள் என்று உழைக்கும், கஷ்டப் படும் மக்களின் கைகளுக்கு மாறுகின்றனவோ, அன்று தான் சமுதாயத்தில் புரட்சிகர மாற்றமேற்படும். அப்படியான வழிகளில்தான் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப் படும்.

தோழர் சண் தனது உரையின்போது யாழ்ப்பாணத்தில் நிலவும் சாதி ஒடுக்குமுறையைப் பற்றியும் குறிப்பிட்டார். தீண்டாமை, யாழ்ப்பாணத்தில் முகத்தில் படிந்துள்ள கரி என்றும், உயர்சாதி என்று அழைக்கப்படுபவர்களிடையேயுள்ள முற்போக்கு எண்ணங்கொண்டவர்கள் இந்தக் கரியை அழிப்பதில் ஒத்துழைக்க வேண்டும் என்றார் அவர்.

சாதிப் பிரச்சினை மீது பலாத்கார நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கு கம்யூனிஸ்ட் கட்சிதான் பொறுப்பு என்று கூறுவதற்காக அவர் தமிழரசுத் தலைமையையும் முதலாளித்துவப் பத்திரிகைகளையும் கண்டித்தார். அது ஒரு பச்சைப் பொய். உண்மை நிலைமையோ வேறனது. சாதி வெறிகொண்ட ஹிந்துக்களிடையேயுள்ள திமிர் பிடித்த ஒரு பகுதியும் பொலிஸ் காட்டுமிராண்டித்தனமும் தான் பலாத்காரத்திற்குக் காரணமாகும்.

தாழ்த்தப்பட்ட மக்கள் கடந்த ஆண்டுகளிலும் இன்றும் உயர் சாதியினர் என அழைக்கப்படுவோரினால் வாயால் சொல்ல முடியாத விதத்தில் நசுக்கப்படுகையில், பலாத்காரமின்மையையும், அஹிம்சையையும் பற்றி நீதி போதனை புரிய முன்வராத தமிழரசுத் தலைவர்களின் கபட வேடத்தை தோழர் சண் அம்பலப்படுத்தினர். இந்த ஒடுக்குமுறைக்கெதிராகப் போராட வேண்டுமென்று தாழ்த்தப்பட்ட மக்கள் தீர்மானிக்கும் போது மட்டும்தான் பலாத்காரம் வேண்டாம் என்ற அறைகூவல் வெளிவருகிறது என்றார்.

சமூக சமத்துவத்திற்கான தாழ்த்தப்பட்ட சாதி மக்களின் இயக்கத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவையளித்துள்ள ஒரேயொரு கட்சி என்ற கம்யூனிஸ்ட் கட்சி என்பதையிட்டும், அது தொடர்ந்தும் ஆதரவளிக்கும் என்பதையிட்டும் பெருமிதமடைவதாக தோழர் சண் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், பாராளுமன்ற ஆசனங்களைப் பெற முடியாது, உயர் சாதியினர் என்று அழைக்கப்படுவோரினிடையேயுள்ள ஆதரவை இழந்து விடுவோம் என்ற அச்சத்தினால் தாழ்த்தப்பட்ட மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரிக்கப் பயங்கொண்ட சந்தர்ப்பவாதக் கட்சிகளாக, போலி இடதுசாரி கட்சிகளான கெனமன் திரிபுவாதக் கும்பலும், சமசமாஜக் கட்சியும் அம்பலமாகியுள்ளன என்றார். மகத்தான ஹர்த்தால் தினத்தை நினைவு கூரியும், அரிசிவெட்டையும், யு.என்.பி.யின் பொது ஜன விரோத நடவடிக்கைகளை எதிர்த்தும், இஸ்ரேல் ஆக்கிரமிப்பைக் கண்டித்து அராபிய மக்களுக்கு ஆதரவு தெரிவித்தும், வட பகுதியில் நடைபெறும் சாதி ஒழிப்பு இயக்கத்தை ஆதரித்தும் நடைபெற்ற இக் கூட்டத்திற்குத் தோழர் துரைரத்தினம் தலைமை வகித்தார்.

இக் கூட்டத்தில் சி. டி. யு. எப்-பின் உப-தலைவர் ஹிக்கொட தர்மசேன, சி. டி. யு. எப். உதவிச் செயலாளர் எம். சி. எம். ஷாபி, தொழிலாளி ஆசிரியர் எஸ். இளங்கீரன், தீப்பொறி ஆசிரியர் எம். கே. அந்தனிசில் உட்பட மற்றும் பலர் பேசினர்.

---

பதிப்பித்து வெளியிடுபவர்: ஏ. ஐயசூரிய, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2, அச்சிட்டது: ''தொழிலாளி அச்சகம்'', 121, யூனியன் பிளேஸ்' கொழும்பு-2.